தமிழ்நாடு அரசு

# தமிழ்

## மூன்றாம் வகுப்பு

தீண்டாமை
மனிதநேயமற்ற செயல் – பெருங்குற்றம்

பள்ளிக் கல்வித்துறை

தமிழ்நாடு அரசு
இலவசப் பாடநூல் வழங்கும்
திட்டத்தின்கீழ் வெளியிடப்பட்டது
(விற்பனைக்கு அன்று)

© தமிழ்நாடு அரசு
முதல் பதிப்பு : தி.பி. 2042 ; ( 2011 )
( சமச்சீர்க் கல்வி – பொதுப் பாடத்திட்டத்தின்கீழ் வெளியிடப்பட்ட நூல் )

## பாடநூல் குழு

### குழுத்தலைவர்

கோ.பழநிவேல்முருகன், மேனாள் முதுநிலை விரிவுரையாளர், மா.ஆ.க.ப.நிறுவனம், முனைஞ்சிப்பட்டி,திருநெல்வேலி.

### மேலாய்வாளர்கள்

முனைவர். கோ. விருதசாரணி, விரிவுரையாளர், மா.ஆ.க.ப.நிறுவனம், கிருஷ்ணகிரி.

தே. திருவளவன், விரிவுரையாளர், மா.ஆ.க.ப.நிறுவனம் நிறுவனம், புதுச்சேரி.

### நூலாசிரியர்கள்

பொ. வாசுகி, தலைமை ஆசிரியர், ஊ . ஒ . நடுநிலைப்பள்ளி , அத்தனூர் பட்டி, சேலம் மாவட்டம்.

இரா. மூர்த்தி, தலைமை ஆசிரியர், குமரன் உயர்நிலைப்பள்ளி , கீழநாச்சிப்பட்டு, திருவண்ணாமலை .

சு. வளர்மதி, இடைநிலை ஆசிரியர், இராமநாதன் செட்டியார் நகர்மன்ற நடுநிலைப்பள்ளி, காரைக்குடி, சிவகங்கை .

இரா. வசந்தி, இடைநிலை ஆசிரியர், ஊ.ஒ. நடுநிலைப்பள்ளி, மஞ்சம்பாக்கம் , திருவள்ளூர் மாவட்டம்.

ச. பஞ்சவர்ணம், தலைமை ஆசிரியர், ஊ . ஒ . தொடக்கப்பள்ளி, கொட்டிவாக்கம், காஞ்சிபுரம் மாவட்டம்.

நா. ஆறுமுகம், இடைநிலை ஆசிரியர், ஊ. ஒ. தொடக்கப்பள்ளி , மேலக்கரைப்பட்டி, சேலம் மாவட்டம்.

---

கணினி அச்சு, வடிவமைப்பு : த.ரகு, மு.விஜயசாரதி ஓவியம், அட்டைப் படம் : அரஸ்

---

நூல் அச்சாக்கம்

தமிழ்நாட்டுப் பாடநூல் கழகம்,

கல்லூரிச் சாலை, சென்னை – 600 006.

---

விலை : ரூ.

இந்நூல் 80 ஜி. எஸ். எம். மேப்லித்தோ தாளில் அச்சிடப்பட்டுள்ளது.

ஆப்செட் முறையில் அச்சிட்டோர் :

## தேசிய கீதம்

ஜன கண மன அதிநாயக ஜய ஹே
பாரத பாக்ய விதாதா
பஞ்சாப ஸிந்து குஜராத மராட்டா
திராவிட உத்கல பங்கா
விந்திய ஹிமாசல யமுனா கங்கா
உச்சல ஜலதி தரங்கா
தவ சுப நாமே ஜாகே
தவ சுப ஆசிஸ மாகே
காஹே தவ ஜய காதா
ஜன கண மங்கள தாயக ஜய ஹே
பாரத பாக்ய விதாதா
ஜய ஹே ஜய ஹே ஜய ஹே
ஜய ஜய ஜய ஜய ஹே!

– மகாகவி இரவீந்திரநாத் தாகூர்

## நாட்டுப்பண் – பொருள்

இந்தியத் தாயே! மக்களின் இன்ப துன்பங்களைக் கணிக்கின்ற நீயே எல்லாருடைய மனத்திலும் ஆட்சி செய்கிறாய்.

நின் திருப்பெயர் பஞ்சாபையும், சிந்துவையும், கூர்ச்சரத்தையும், மராட்டியத்தையும், திராவிடத்தையும், ஒரிசாவையும், வங்காளத்தையும் உள்ளக் கிளர்ச்சி அடையச் செய்கிறது.

நின் திருப்பெயர் விந்திய, இமயமலைத் தொடர்களில் எதிரொலிக்கிறது; யமுனை, கங்கை ஆறுகளின் இன்னொலியில் ஒன்றுகிறது; இந்தியக் கடலலைகளால் வணங்கப்படுகிறது.

அவை நின்னருளை வேண்டுகின்றன; நின் புகழைப் பரவுகின்றன.

இந்தியாவின் இன்ப துன்பங்களைக் கணிக்கின்ற தாயே! உனக்கு
வெற்றி! வெற்றி! வெற்றி!

## தமிழ்த்தாய் வாழ்த்து

நீராருங் கடலுடுத்த நிலமடந்தைக் கெழிலொழுகும்
சீராரும் வதனமெனத் திகழ்பரதக் கண்டமிதில்
தெக்கணமும் அதிற்சிறந்த திராவிடநல் திருநாடும்
தக்கசிறு பிறைநுதலும் தரித்தநறுந் திலகமுமே!
அத்திலக வாசனைபோல் அனைத்துலகும் இன்பமுற
எத்திசையும் புகழ்மணக்க இருந்தபெருந் தமிழணங்கே!
தமிழணங்கே!
உன் சீரிளமைத் திறம் வியந்து
செயல் மறந்து வாழ்த்துதுமே! வாழ்த்துதுமே! வாழ்த்துதுமே!

– 'மனோன்மணியம்' பெ. சுந்தரனார்.

## தேசிய ஒருமைப்பாட்டு உறுதிமொழி

'நாட்டின் உரிமை வாழ்வையும் ஒருமைப்பாட்டையும் பேணிக் காத்து வலுப்படுத்தச் செயற்படுவேன்' என்று உளமார நான் உறுதி கூறுகிறேன்.

'ஒருபோதும் வன்முறையை நாடேன்' என்றும், சமயம், மொழி, வட்டாரம் முதலியவை காரணமாக எழும் வேறுபாடுகளுக்கும் பூசல்களுக்கும் ஏனைய அரசியல் – பொருளாதாரக் குறைபாடுகளுக்கும் அமைதி நெறியிலும் அரசியல் அமைப்பின் வழியிலும் நின்று தீர்வு காண்பேன்' என்றும் நான் மேலும் உறுதியளிக்கிறேன்.

## உறுதிமொழி

'இந்தியா எனது நாடு. இந்தியர் அனைவரும் எனது உடன் பிறந்தவர்கள். என் நாட்டை நான் பெரிதும் நேசிக்கிறேன். இந்நாட்டின் பழம்பெருமைக்காகவும் பன்முக மரபுச் சிறப்புக்காகவும் நான் பெருமிதம் அடைகிறேன். இந்நாட்டின் பெருமைக்குத் தகுந்து விளங்கிட என்றும் பாடுபடுவேன்.


என்னுடைய பெற்றோர், ஆசிரியர்கள், எனக்கு வயதில் மூத்தோர் அனைவரையும் மதிப்பேன்; எல்லாரிடமும் அன்பும் மரியாதையும் காட்டுவேன்.

என் நாட்டிற்கும் என் மக்களுக்கும் உழைத்திட முனைந்து நிற்பேன். அவர்கள் நலமும் வளமும் பெறுவதிலேதான் என்றும் மகிழ்ச்சி காண்பேன்.

| வ.எண் | பாடத்தலைப்பு | பக்கம் |
|---|---|---|
| 1. | கூடி ஆடி மகிழ்வோம் ! | 1 |
| 2. | விளையாடுவோம் வாங்க | 3 |
| 3. | கௌதாரியும் முயலும் | 6 |
| 4. | காட்டில் ஒரு பயணம் | 9 |
| 5. | மகிழ்வான உலகம் | 13 |
| 6. | விடியல் | 15 |
| 7. | எங்கள் தமிழ் | 18 |
| 8. | காண்போம்! படிப்போம்! | 20 |
| 9. | நேர்மை தந்த பரிசு | 25 |
| 10. | மானின் விடுதலை | 28 |
| 11. | மல்லிகை உணவகம் | 30 |
| 12. | விட்டுக்கொடு விருப்பமுடன் | 34 |
| 13. | பள்ளியிலே கொண்டாட்டம் | 37 |
| 14. | ஏற்காடு செல்வோம் | 40 |
| 15. | சிறுவர்இதழ்களைப் படிப்போம் | 44 |
| 16. | பள்ளிக்குச் செல்லும் வழியிலே | 49 |
| 17. | கண்டும் கேட்டும் களிப்போம்! | 52 |
| 18. | ஊர் செழித்தது | 54 |
| 19. | படம் பார்த்துப் புதிர்களை அறிவோம் | 58 |
| 20. | விடுதலை வீரர் | 60 |
| 21. | மரபுச் சொற்களை அறிவோம் | 63 |
| 22. | செம்மொழித் தமிழின் சிறப்புகள் | 66 |
| 23. | சின்னஞ்சிறுவன் | 69 |
| 24. | படவிளக்க அகர முதலி | 74 |
| 25. | செய்யுள் பகுதி<br>மனப்பாடப் பகுதி–செய்யுள் பகுதி முழுமையும் | 78 |

# 1. கூடி ஆடி மகிழ்வோம்!





தோட்டம் நல்ல தோட்டம் – நம்மைச்
சொக்க வைக்கும் தோட்டம்
கூட்டமாக நாமும் – ஒன்றாய்க்
கூடி ஆடும் தோட்டம்.
வண்ண வண்ண மலரால் – நம்மை
மகிழ வைக்கும் செடிகள்!
தின்னத் தின்னப் பழங்கள் – மேலும்
தின்னக் கொடுக்கும் மரங்கள்!
கொஞ்சும் கிளியின் குரலும் – கருங்
குயிலின் இசையும், அடடா!
நெஞ்சை அள்ளுகிறதே! – இதை
நினைக்கும் போதே இன்பம்.
பட்டுப் போல அழகாய் – புல்
படர்ந்திருக்கும் தரையில்
விட்டுப் போக மனமே – இல்லை
மிகவும் நல்ல தோட்டம்.

அழ. வள்ளியப்பா



## பயிற்சிகள்

### அ) பாடலில் இடம் பெற்றுள்ள வருணனைகளைக் கூறுங்கள், எழுதுங்கள்.

எடுத்துக்காட்டு: சொக்கவைக்கும் தோட்டம்

1. ______________________________
2. ______________________________
3. ______________________________
4. ______________________________
5. ______________________________

### ஆ) சேர்த்து எழுதுங்கள்.

1. கருமை + குயில் = கருங்குயில்
2. படர்ந்து + இருக்கும் = ______________
3. பட்டு + போல = ______________
4. வண்ணம் + மலர் = ______________

### இ) சொற்றொடரை உருவாக்குங்கள், எழுதுங்கள்.

| | | |
|---|---|---|
| மான்<br>கன்றுக்குட்டி<br>குதிரை<br>தொடர்வண்டி | வேகமாக<br>துள்ளி | ஓடும் |

எடுத்துக்காட்டு : மான் வேகமாக ஓடும்


1. ______________________
2. ______________________
3. ______________________
4. ______________________
5. ______________________

### ஈ) வினாக்களுக்கு விடையளியுங்கள்.

1. குழந்தைகள் கூடி ஆடும் இடம் எது ?
2. செடிகள் எப்படி நம்மை மகிழ வைக்கும் ?
3. நெஞ்சை அள்ளுபவை எவை ?
4. மரங்கள் எவற்றைக் கொடுக்கின்றன ?
5. பட்டுப் போல அழகாய்ப் படர்ந்திருப்பது எது ?

### உ) பள்ளியில் தோட்டம் எவ்வாறு அமைக்கலாம் என்று நண்பர்களுடன் கலந்துரையாடுங்கள்.

# 2. விளையாடுவோம் வாங்க



என் பெயர் எழிலன். எங்கள் ஊர் புதூர். அங்கு ஒலிபெருக்கியில் ஏதோ அறிவிப்பு! நான் உற்றுக் கேட்டேன். இந்த ஆண்டு நடைபெறும் விளையாட்டு விழாவைப் பற்றி அறிவித்தனர். 'விளையாட்டு' என்ற சொல் காதில் விழுந்தவுடன் என் உள்ளம் மகிழ்ச்சியால் துள்ளியது.



பெரியவர், சிறியவர் எனத் தனித்தனியாகப் போட்டிகள் வழக்கமாக நடைபெறும். சென்ற ஆண்டு சிறுவர்களுக்கான விளையாட்டுப் போட்டியில் நானும் கலந்து கொண்டேன். போட்டிகள் ஊராட்சி மன்ற விளையாட்டுத் திடலில் நடைபெற்றன. ஊராட்சி மன்றத் தலைவர் தலைமை தாங்கினார்.

பக்கத்து ஊர்மக்களும் கலந்து கொண்டனர். போட்டியில் கலந்து கொள்பவர்கள் முதலில் தம் பெயரைப் பதிவு செய்தார்கள். பெரியவர்களுக்குக் கபடி, ஓட்டப்போட்டி, உறியடித்தல், வழுக்குமரம் ஏறுதல், கயிறு இழுத்தல் முதலிய போட்டிகள் நடைபெற்றன.

சிறுவர்களுக்குத் தவளைஓட்டம், முயல்ஓட்டம், உருளைக்கிழங்கு சேகரித்தல், முறுக்குக்கடித்தல், கோணிப்பை ஓட்டம் முதலிய போட்டிகள் நடத்தப்பட்டன. பெண்களுக்கு இசைநாற்காலிப் போட்டியும் கோலப் போட்டியும் நடத்தப்பட்டன.

நான் ஓட்டப்போட்டி, முறுக்குக்கடித்தல் ஆகிய போட்டிகளில் கலந்து கொண்டேன். ஓட்டப்போட்டியில் முதலிடத்தைப் பெற்றேன்.

ஊராட்சி மன்றத் தலைவர் எனக்குப் பரிசு வழங்கினார், மேலும் பல பரிசுகள் பெறவேண்டும் என வாழ்த்தினார். எனக்கு மகிழ்ச்சியாக இருந்தது. அவர் கூறியதைப் போல் பல வெற்றிகள் பெற வேண்டும் என எண்ணினேன். ஊராட்சி மன்றத் திடலில் விடுமுறை நாள்களிலும் விடா முயற்சியுடன் பயிற்சிகள் செய்து வருகிறேன்.



இதோ! இந்த ஆண்டும் விளையாட்டுப் போட்டிகள் நடைபெறும். அதில் நானும் கலந்து கொள்வேன். உறுதியாக மீண்டும் முதல் பரிசை வெல்வேன். எனக்கு வாழ்த்துக் கூறுங்களேன்!

## பயிற்சிகள்

### அ) அகரமுதலியைப் பார்த்துப் பொருள் கூறுங்கள், எழுதுங்கள்.

எடுத்துக்காட்டு : ஒலிபெருக்கி = ஒலியினைப் பெருக்கும் கருவி

1. விடாமுயற்சி = ______________________
2. உறுதி = ______________________
3. திடல் = ______________________

### ஆ) சேர்த்து எழுதுங்கள்.

எடுத்துக்காட்டு : ஓட்டம் + போட்டி = ஓட்டப்போட்டி

1. ஊராட்சி + மன்றம் = ______________________
2. உருளை + கிழங்கு = ______________________
3. கோணி + பை = ______________________
4. மன்றம் + தலைவர் = ______________________

## இ) அடைப்புக்குள் இருக்கும் சொற்களைக் கொண்டு கோடிட்ட இடத்தை நிரப்புங்கள்.

(புதூர், திடலில், பயிற்சிகள், பதிவு, அறிவிப்பு)

எடுத்துக்காட்டு: எங்கள் ஊர் புதூர்.

1. ஒலிபெருக்கியில் ____________ கேட்டது.
2. ஊராட்சி மன்ற விளையாட்டுத் ____________ போட்டிகள் நடைபெற்றன.
3. போட்டியில் கலந்து கொள்பவர்கள் தம் பெயரைப் __________ செய்தார்கள்.
4. விடா முயற்சியுடன் ____________ செய்து வருகிறேன்.

## ஈ) விடையளியுங்கள்.

1. ஒலிபெருக்கியில் எந்த விழாவை அறிவித்தார்கள்?
2. விளையாட்டு விழாவிற்குத் தலைமை தாங்கியவர் யார்?
3. சிறுவர்களுக்கு நடத்தப்பட்ட விளையாட்டுப் போட்டிகள் எவை?
4. எழிலன் எந்தெந்தப் போட்டிகளில் கலந்து கொண்டான்?
5. உனக்குப் பிடித்த விளையாட்டுகளின் பெயர்களைக் கூறுக.

## உ) சொற்களைச் சொற்றொடரில் அமைத்திடுங்கள்.

எடுத்துக்காட்டு : வழக்கம் : எங்கள் ஊரில் ஒவ்வோர் ஆண்டும் விளையாட்டு விழா நடைபெறுவது வழக்கம்.

1. மகிழ்ச்சி : ________________________________
2. விளையாட்டு : ________________________________
3. பரிசு : ________________________________
4. பயிற்சி : ________________________________
5. போட்டி : ________________________________

## ஊ) எடுப்போம்! பேசுவோம்!

மாணவர்களை வட்டமாக உட்கார வைத்திடுக. கொடுக்கப்பட்ட துண்டுத் தாள்களில் எனது ஊர், எனது தெரு, எங்கள் பள்ளி, கடைவீதி, பூங்கா, நூலகம் எனத் தனித்தனியாக எழுதுக. அவற்றை ஓர் அட்டைப் பெட்டியில் போடுக. பெட்டியைச் சுற்றுக்கு விடுக. ஆசிரியர், கையொலி எழுப்பும்போது பெட்டி யாரிடம் உள்ளதோ, அவர் ஒரு தாளை எடுக்க வேண்டும். அதில் உள்ள தலைப்பினைப் பற்றிப் பேசவேண்டும்.

## எ) உங்கள் ஊரைப் பற்றிக் கூறுங்கள்! நிரப்புங்கள்!

எடுத்துக்காட்டு: எங்கள் ஊரின் பெயர் மேலூர்.

என் வீடு கீழத்தெருவில் அமைந்துள்ளது.

எங்கள் ஊரின் பெயர் __________.

இவ்வூரில் __________ அமைந்துள்ளது.

எங்கள் ஊரில் __________ உள்ளன.

# 3. கௌதாரியும் முயலும்

ஒரு கௌதாரிப் பறவை மரத்தடியில் பொந்தமைத்து, பல காலமாக வாழ்ந்து வந்தது. ஒரு நாள், உணவு தேடி வெகுதூரம் பறந்து சென்று ஒரு நெல்வயலைக் கண்டது. வயலில் நெற்கதிர்கள் விளைந்திருந்தன. அது அறுவடைக்காலம். கௌதாரி, வயிறு நிறைய நெல் மணிகளைச் சாப்பிட்டு அங்கேயே தங்கிவிட்டது.

நாள்கள் பல கழிந்தன. நீண்ட நாள்களாகியும் கௌதாரி திரும்பி வரவில்லை. கௌதாரியின் பொந்தில் முயல் ஒன்று வாழத்தொடங்கியது. அறுவடைக்காலம் முடிந்ததும், கௌதாரி தன் இருப்பிடத்திற்குத் திரும்பியது. தன்னுடைய வீட்டில் முயல் இருப்பதைப் பார்த்துக் கோபம் கொண்டது. முயலிடம், 'இது என் வீடு நீ வெளியேறு' என்று கூறியது. 'நான் இந்த வீட்டில் நீண்ட நாள்களாக இருக்கிறேன். இந்த வீடு எனக்கேதான் சொந்தம்' என்றது முயல்.



வீடு யாருக்கு உரியது என்பதை முடிவு செய்ய உரிய நீதிபதியைத் தேடிச்சென்றன. நீதிபதியைத் தேடித்தேடி அலைந்தன. கடைசியில், ஒரு வயதான பூனையைக் கண்டன. அந்தப்பூனை, பசியினால் களைத்து கண்மூடி அமர்ந்து இருந்தது. இவரிடம், நமக்கு நீதி கிடைக்கும். கேட்டுப் பார்ப்போம் என்று கௌதாரியும் முயலும் பேசிக் கொண்டன.

இருவரும் பேசிக்கொண்டதை பூனை கேட்டது.தேடாமலேயே உணவு கிடைத்து விட்டது என்று மகிழ்ந்தது. கண்களை மூடி மந்திரம் கூறுவதைப்போல முணுமுணுத்தது. இதைப்பார்த்த கௌதாரிக்கும் முயலுக்கும் பூனையிடம் நம்பிக்கை ஏற்பட்டது. இரண்டும் பூனையின் அருகே சென்று வணக்கம் கூறின. கண்விழித்த பூனை, 'நீங்கள் யார் ? உங்களுக்கு என்ன வேண்டும் ?' என்று கேட்டது.

இரண்டும், நடந்ததைக்கூறி நீதி கேட்டன. வஞ்சக எண்ணம் கொண்ட பூனை, 'எனக்கு வயதாகி விட்டது. காது சரியாகக் கேட்கவில்லை. சற்று அருகில் வந்து பேசுங்கள்' என்று கூறியது.



கௌதாரியும் முயலும், பூனையின் அருகில் சென்றன. பூனை, இரண்டையும் கவ்விப் பிடிக்க முயன்றது. ஆபத்தை உணர்ந்த முயல் வேகமாகத் தப்பி ஓடியது. கௌதாரியும் சட்டெனப் பறந்து தப்பித்தது.

'நல்லவேளை, தப்பிப் பிழைத்தோம், இனி சண்டையில்லாமல் ஒன்றுபட்டு இருப்போம்', என்று முடிவெடுத்தன.

## பயிற்சிகள்

### அ) வினாக்களுக்கு விடை எழுதுங்கள்.

1. கௌதாரிப் பறவை எங்கு வாழ்ந்து வந்தது ?
2. கௌதாரி ஏன் கோபம் கொண்டது ?
3. முயலும் கௌதாரியும் யாரைத் தேடிச் சென்றன ?
4. தேடாமலேயே உணவு கிடைத்துவிட்டது என்று கூறியது யார் ?
5. கௌதாரியும் முயலும், சண்டையில்லாமல் இருக்க வேண்டும், என்ற முடிவுக்கு வந்தது எப்படி ?

### ஆ) பின்வருவனவற்றுள் பொருளுக்கேற்ப, ஏற்ற சொல்லை அடைப்புக்குள்ளிருந்து எடுத்து எழுதுக.

1. புறாக்கள் ______________ தேடிச் சென்றன. (இரை / இறை)
2. என் வீட்டு மாடி ______________ புத்தகங்கள் இருக்கின்றன. (அரையில் / அறையில்)
3. கடைக்காரர் ______________ இல்லையெனக் கூறினார். (சில்லரை / சில்லறை)
4. இவ்வுலகம் ______________ விரிந்துள்ளது ( பறந்து / பரந்து )

### இ) கொடுக்கப்பட்டுள்ளவற்றுள் பொருத்தமானவற்றை எடுத்து எழுதுக.

1. காலையில் ______________ நன்று.
2. கற்றவர் கூறுவதைக் ______________ நன்று.
3. சத்துள்ள உணவுகளை ______________ உடலுக்கு நன்று.
4. மாலையில் ______________ சிறந்த உடற்பயிற்சி.
5. நகத்தைக் ______________ கெட்ட பழக்கம்.

( கேட்டல், கடித்தல், படித்தல், விளையாடுதல், உண்ணுதல் )

### ஈ) பொருத்துக.

| பழமொழி | வலியுறுத்தும் கருத்து |
|---|---|
| 1. கந்தையானாலும் கசக்கிக் கட்டு | உடல்தூய்மை |
| 2. கூழானாலும் குளித்துக்குடி | உடைத்தூய்மை |
| 3. வாய்மையே வெல்லும் | உள்ளத்தூய்மை |

# 4. காட்டில் ஒரு பயணம்

( இரவு உணவுக்குப்பின், செல்வன் காடுகளைப் பற்றிய சிந்தனையில் இருந்தவாறே கண் அயர்ந்தான், கனவு வந்தது )

செல்வன் காட்டிற்குச் செல்கிறான். அங்கு மலையின் அடிவாரத்தில் நீர் வற்றிய ஏரி. அந்த ஏரிக்கரையில் மரங்கள் முரிந்திருந்தன. அவற்றிற்கு அருகில் வெள்ளைமுயல் துள்ளி ஓடியது. வேகமாக ஓடிய முயல் , வழியில் இருந்த ஒரு பள்ளத்தில் விழுந்தது. இதைக்கண்ட செல்வன், குட்டிமுயல் வெளியே வர உதவி செய்தான்.




பின் சிறிதுதூரம் சென்றான். அங்கே, குரங்குகள் மரத்தில் ஏறிக் கிளைக்குக்கிளை தாவிக்கொண்டு இருந்தன. அணில், மணலில் குதித்து விளையாடிக் கொண்டு இருந்தது. அங்கு , விலங்குகள் கூடியிருப்பதைக் கண்ட செல்வன் புதருக்குள் ஒளிந்தான்; நடைபெறுவதை உற்றுக் கவனித்தான்.





சிங்கம் : நண்பர்களே! நாம் தண்ணீரை உடனடியாகத் தேடிக்கொள்ள வேண்டும். தண்ணீர் இல்லையெனில் நாம் உயிர்வாழ இயலாது. எனவே, அதற்கு மாற்று வழியைச் சிந்திக்க வேண்டும்.



மான் : தலைவரே! நாம் அனைவரும் இந்தக்காட்டை விட்டு வேறு எங்காவது சென்று விடுவோமா?

சிங்கம் : நண்பா! நாம் இருக்கும் இக்காடுதான் நமக்குப் பாதுகாப்பு. எனவே, இந்த இடத்திலேயே தண்ணீரைத் தேடிக்கொள்ளலாம்.



குதிரை : மழை பெய்தால்தான் தண்ணீர் கிடைக்கும். எனவே மழை பெறுவதற்கு என்ன செய்ய வேண்டும்?

சிங்கம் : மழை பெய்வது இயற்கையானச் செயலாகும். மரங்கள் மழை பெய்வதற்கு உதவி செய்கின்றன. காடுகளில் உள்ள மரங்கள் வெட்டப்படுகின்றன. எனவே, மழை பொழிவது குறைகிறது.

நரி : மக்கள் செய்த தவறால் நாம் மழையை இழந்தோம். இதற்கு மாற்று வழிதான் என்ன?



சிங்கம் : நாம் அனைவரும் மரக்கன்றுகளை நடவேண்டும், பாதுகாப்பாக வளர்க்க வேண்டும், இதனால் நமது காட்டில் மழை பொழியும், மரங்கள் தழைக்கும், காடும் செழிக்கும்.

மற்ற எல்லா விலங்குகளும் ஒரே குரலில் : நன்று! நன்று! இன்றே நாம் அனைவரும் மரக்கன்றுகளை நட்டு வளர்ப்போம்.





கண்விழித்த செல்வன், தன் வீட்டுத் தோட்டத்தில் மரக்கன்றுகள் நடுவதைக் கண்டு அவன் தாய் மகிழ்ந்தாள்.

## பயிற்சிகள்

அ) அடைப்புக்குள் உள்ள சொற்களைப் பயன்படுத்திக் கோடிட்ட இடங்களை நிரப்புங்கள்.

(மரத்தில், துள்ளி, உயிர், குதித்து, செழிக்கும்)

1. வெள்ளை முயல் ____________ ஓடியது.
2. அணில் மணலில் ____________ விளையாடியது.
3. குரங்குகள் ____________ ஏறின.
4. மழை பொழிந்தால் காடு ____________
5. தண்ணீர் இல்லையெனில் நாம் ____________ வாழ முடியாது.

ஆ) விடையைக் கூறுங்கள்; எழுதுங்கள்.


1. குரங்குகள் என்ன செய்தன?
2. விலங்குகள் ஏன் மாற்று வழியைச் சிந்தித்தன?
3. கண்விழித்த செல்வன் என்ன செய்தான்?

இ) அடைப்புக்குள் உள்ள சொற்களிலிருந்து பொருத்தமான சொல்லை எடுத்து எழுதுங்கள்.

(தலை, பரவை, பறவை, பள்ளி, ஏரி, பல்லி, தழை, ஏறி)

1. சிறகுகள் உள்ளது = ____________
2. கடலின் மறு பெயர் = ____________
3. ஆடு தின்பது = ____________
4. உடலின் ஒரு பகுதி = ____________
5. குழந்தைகள் செல்வது = ____________
6. சுவரில் ஊர்வது = ____________
7. நீர் நிறைந்திருப்பது = ____________
8. படியில் செல்வோம் = ____________

ஈ) மரத்திலுள்ள எழுத்துகளைப் பயன்படுத்திச் சொற்களை உருவாக்கி எழுதுங்கள்.




எடுத்துக்காட்டு : அன்பு

____________ ____________


____________ ____________

____________ ____________

____________ ____________

____________ ____________

# 5. மகிழ்வான உலகம்



படத்தில் உள்ளவை பற்றிச் சிறு தொடர்கள் அமையுங்கள்.

எடுத்துக்காட்டுகள் :

அணில் ஓடுகிறது.

காகம் கூட்டில் அமர்ந்துள்ளது.

## பயிற்சிகள்

### அ) படத்தைப் பார்த்துக் கோடிட்ட இடங்களை நிரப்புங்கள்.

1. ______________ மரத்தில் தொங்கிக் கொண்டிருக்கின்றன.
2. மரப்பொந்தில் இரண்டு ______________ உள்ளன.
3. சிலந்திப் பூச்சி ______________ விட்டுக் கீழே விழுகிறது.
4. காகம், கூட்டில் உள்ள தன் குஞ்சுகளுக்கு ______________ ஊட்டுகிறது.

### ஆ) சொற்களை இணைத்துத் தொடராக்குங்கள்.

| | | |
|---|---|---|
| வண்ணத்துப் பூச்சிகள்<br>இலைகளுக்கிடையே<br>சிவப்பு வண்டுகள் | பூக்கள் மேலே<br>இலையில்<br>சிலந்தி வலை | உள்ளது<br>ஊர்கின்றன<br>பறக்கின்றன |

1. ________________________________
2. ________________________________
3. ________________________________

### இ) கொடுத்துள்ள சொற்களைக் கொண்டு படத்தைப் பார்த்துச் சொற்றொடர் அமையுங்கள்.

( வண்ணத்துப்பூச்சி, மரங்கொத்தி, அணில்கள், புழுக்கள், எறும்புகள் )

எடுத்துக்காட்டு : அணில்கள் மரக்கிளையில் ஓடி விளையாடுகின்றன.

1. ________________________________
2. ________________________________
3. ________________________________
4. ________________________________

### ஈ) பின்வரும் சொற்றொடர்களில் தேவையான நிறுத்தக்குறிகளை இடுக.

1. நேற்று மழை பொழிந்தது
2. கனிமொழி நன்கு கற்றாள் நல்ல மதிப்பெண்கள் பெற்றாள் அனைவருடைய பாராட்டையும் பெற்றாள்
3. இமயத்தின் உயரம் என்னே
4. இந்தியாவில் தமிழ் மலையாளம் தெலுங்கு முதலான பல மொழிகள் பேசப்படுகின்றன

# 6. விடியல்



ஒரு யூதத்துறவி தன் மாணவர்களை அழைத்து அவர்களிடம் பின்வரும் கேள்வியைக் கேட்டார். "இரவுமுடிந்து விடியல் தொடங்கும் நேரம் எப்போது எனக் கூற முடியுமா?". அதற்கு ஒரு மாணவன் , "எதிரில் வருவது நாயா, ஆட்டுக் குட்டியா என அறிந்து கொள்ளும் அளவிற்கு வெளிச்சம் வரும் நேரம்" என்றான். "இல்லை" என்றார் யூதத்துறவி. மற்றொரு மாணவனோ, "எதிரில் உள்ளது யோக் மரமா ? அத்திமரமா ? என்று அறியும் அளவிற்குத் தேவையான வெளிச்சம் வரும் நேரம்" என்றான். " அதுவும் இல்லை" என்றார் துறவி.

"ஐயா, சரியான விடையைத் தாங்களே கூறுங்கள்" என்றான் ஒரு மாணவன். அதற்குத் துறவியோ "ஒரு புதியவர் நம்மிடையே வரும்பொழுது அவரும் நம் சகோதரர் என்று நாம் எப்பொழுது நினைக்கிறோமோ, அந்தநேரமே விடியல் தொடங்கும் நேரமாகும்". என்று அமைதியுடன் கூறினார்.

உலக அமைதிக்கான நோபல் பரிசு பெற்ற அறிஞர் சிமோன் பிரெஸ் கூறிய கதை.

## பயிற்சிகள்

**அ) பிரித்து எழுதுங்கள்.**

1. ஆட்டுக்குட்டி =
2. நம்மிடையே =

**ஆ) வினாக்களுக்கு விடை எழுதுங்கள்.**

1. மாணவர்களை அழைத்து யூதத்துறவி என்ன கேட்டார் ?
2. முதல் மாணவன் கூறிய பதில் யாது ?
3. இரண்டாவது மாணவன் கூறிய பதில் யாது ?
4. யூதத்துறவி கூறிய சரியான பதில் யாது ?

**இ) விடுகதையைப் படியுங்கள். விடை எழுதுங்கள்.**

கழுத்தை நீட்டிக் கூவிடுமே
காலைப் போதில் சிறகடித்தே
'எழுந்திரு விழித்திரு' என்றதுவும்
எழுப்பித் தூக்கம் ஓட்டிடுமே! ________________

நன்றி உள்ள உயிர்களிலே
நல்ல மிருகம் இதுவொன்றாம்
வெற்றி கொண்ட வீரன்போல்
வீட்டைக் காத்து நின்றிடுமே! ________________

**ஈ) பொருள் இரண்டு, சொல் ஒன்று எழுதுங்கள்.**

எடுத்துக்காட்டு : யானைக்கு வேறுபெயர் கரி
தீயை அணைத்தால் கிடைப்பது கரி

1. தானியம் அளக்க உதவுவது ________
   ஏறிச் செல்ல உதவுவது ________
2. கதிரவன் மறையும் நேரம் ________
   மலர்கள் தொடுக்கக் கிடைப்பது ________
3. சிரிப்புக்கு வேறு சொல் ________
   அணிகலனுக்கு வேறு சொல் ________

( மாலை, நகை, படி )

**உ) படத்தைப் பார்த்து நீங்களும் வருணனையைத் தொடருங்கள்.**

அடர்ந்த புல்வெளி



________________________________________

## ஊ) கதையைக் கேட்டு / படித்து முடிவைக் கூறுங்கள்.

### கலை, பண்பாட்டைப் போற்று!



திருவிழாவில் சிற்ப வேலைப்பாடுகளுடன் கூடிய தேர் ஓடிக் கொண்டிருந்தது. அழகிய தேரைப் பார்த்த அல்லியும் வள்ளியும் வியப்படைந்தார்கள். 'வள்ளி, தேரின் அழகைப் பார்த்தாயா ?' என்றாள் அல்லி. "ஆமாம் பார்த்தேன். இவையெல்லாம் நமது கலைநயத்தையும் பண்பாட்டையும் விளக்கக்கூடிய சிறந்த சிற்பங்களாகும். இவற்றைப் போற்றிப் பாதுகாக்க வேண்டியது நமது கடமை'', என்றாள் வள்ளி.

வள்ளி சொல்வது உண்மைதான். இவற்றைப் பாதுகாக்க நாம் என்ன செய்ய வேண்டும் ?

________________________________________

________________________________________

________________________________________

குறிப்பு : கதையின் முன்பகுதியை ஆசிரியர் கூறி, முடிவை மாணவர்களைக் கூறச்செய்யுங்கள்.


### செயல் திட்டம்

படத்தில் வண்ணங்களுக்குப் பொருத்தமான தானியங்களை ஒட்டலாம்.



கழுகு படத்தின் மேல் கருஞ்சிவப்புப் பயறுகளை ஒட்டுங்கள். கழுகின் அழகைக் கண்டு மகிழுங்கள். அதுபோல் பறவைகள், விலங்குகளின் படங்களை வரையுங்கள். வண்ணத்திற்கு ஏற்ற தானியங்களை ஒட்டுங்கள்.

# 7. எங்கள் தமிழ்



இனிமைத் தமிழ்மொழி எமது – எமக்கு
இன்பந் தரும்படி வாய்த்த நல் அமுது!
கனியைப் பிழிந்திட்ட சாறு – எங்கள்
கதியில் உயர்ந்திட யாம்பெற்ற பேறு!
தனிமைச் சுவையுள்ள சொல்லை – எங்கள்
தமிழினும் வேறெங்கும் யாம்கண்டது இல்லை!
நனியுண்டு நனியுண்டு காதல் – தமிழ்
நாட்டினர் யாவர்க்குமே தமிழ் மீதில்!
தமிழுண்டு தமிழ்மக் களுண்டு – இன்பத்
தமிழுக்கு நாளும் செய்வோம் நல்ல தொண்டு!
தமிழ் என்று தோள் தட்டி ஆடு! – நல்ல
தமிழ் வெல்க வெல்க என்றே தினம்பாடு!

–பாவேந்தர் பாரதிதாசன்

## பயிற்சிகள்

அ) அகரமுதலியைப் பார்த்துப் பொருள் கூறுங்கள், எழுதுங்கள்.

எடுத்துக்காட்டு : அமுது – சோறு

1. கனி –
2. நனி –
3. தொண்டு –
4. தினம் –
5. பேறு –
6. வெல்க –

ஆ) இணைத்துக் கூறுங்கள், எழுதுங்கள்.

எடுத்துக்காட்டு : தனிமை + சுவை = தனிமைச்சுவை

1. தோள் + தட்டி = ________________
2. இன்பம் + தமிழ் = ________________
3. வேறு + எங்கும் = ________________

இ) பிரித்துக் கூறுங்கள், எழுதுங்கள்.

எடுத்துக்காட்டு :

நனியுண்டு = நனி + உண்டு

1. மக்களுண்டு = ________ + ________
2. தமிழுண்டு = ________ + ________
3. கனியுண்டு = ________ + ________

ஈ) ஓரிரு வார்த்தைகளில் விடையளியுங்கள்.

1. இனிமையான மொழி எது ?

________________________

2. தமிழ் எப்படிப்பட்ட சொல்லை உடையது ?

________________________

3. நனியுண்டு, நனியுண்டு காதல் – எதன் மீதில் ?

________________________

உ) பொருத்தமான சொல்லை அடைப்புக்குள் இருந்து எடுத்தெழுதுங்கள்.

விலங்கின் உறுப்பு ________ ( வாள் / வால் )

வீரனிடம் இருப்பது ________

வேகமாய் வருவது ________ ( வெல்லம் / வெள்ளம் )

விரும்பி உண்பது ________

கடலின் ஓரம் ________ ( கரை / கறை )

சட்டையில் படுவது ________

தமிழ் மாதத்தில் ஒன்று ________ ( ஆனி / ஆணி )

சுவரில் அடிப்பது ________

ஊ) ஒலித்துப் பழகுங்கள்.

1. அல்லி மலரை அள்ளி வந்தேன்.
2. காலை வேளையில் வேலை செய்தேன்.
3. பால் கெட்டுப் பாழ் ஆனது.
4. கண்ணன் வெண்ணெய் உண்டான்.



எ) படத்தில் பறவையும் மீனும் சிறுமியும் என்ன செய்கிறார்கள். கலந்துரையாடுங்கள்.

# 8. காண்போம்! படிப்போம்!

( ஞாயிறு விடுமுறை நாள். மங்கை தன் தோழி நங்கையின் இல்லத்திற்குச் செல்கிறாள் )

**நங்கை :** வா, மங்கை இன்று நாம் இருவரும் சேர்ந்து ஓர் இடத்திற்குச் செல்லலாமா ?

**மங்கை :** ஓ! செல்லலாமே! எங்கே செல்கிறோம் என்பதை நான் தெரிந்து கொள்ளலாமா ?

**நங்கை :** உனக்கு மிகவும் பிடித்த இடம்தான். அங்குச் சென்றபின் தெரிந்துகொள்ளலாம்.

(வண்டலூர் அறிஞர் அண்ணா உயிரியல் பூங்காவிற்கு இருவரும் செல்கின்றனர்)




**மங்கை :** மிகவும் மகிழ்ச்சியாக இருக்கிறது. எனக்கும் இங்குள்ள பறவைகளையும் விலங்குகளையும் கண்டு வர ஆசையாக இருந்தது.




**நங்கை :** வா! இருவரும் உள்ளே செல்லலாம்.

( இருவரும் பூங்காவினுள் செல்கின்றனர் )

மங்கை : அதோ! பூங்காவின் வேலைநேர அறிவிப்புப் பலகை உள்ளது. காலை 9 மணி முதல் மாலை 5 மணி வரை வேலை நேரமாகும் என்று குறிப்பிடப்பட்டுள்ளதே. விரைவில் வா உள்ளே செல்லலாம்.




நங்கை : அதோ! சீட்டு வழங்கும் இடம். அங்குச் சென்று வரிசையில் நின்று நுழைவுக்கட்டணம் செலுத்தி உள்ளே செல்லலாம்.

(இருவரும் உள்ளே செல்கின்றனர்)





மங்கை : இதோ! பறவைகளையும் மான்களையும் பார்ப்பதற்குச் செல்லும்வழி குறிக்கப்பட்டுள்ளது.

(இருவரும் அவ்வழியே செல்கின்றனர். அங்கே)

நங்கை : மங்கை! பார்! மயில் தோகை விரித்தாடுவது பார்ப்பதற்கு எவ்வளவு அழகாக உள்ளது! ஆண் மயிலுக்குத்தான் தோகை உண்டு. பல வண்ணங்களில் மயில்கள் தோகை விரித்தாடும் காட்சி அருமையாக உள்ளது.





மங்கை : அதோ! அழகிய புள்ளி மான்கள். அவை அனைத்தும் கூட்டமாக இருப்பதைப் பார்!. மயிலுக்குத் தோகைஅழகு! மான்களுக்குக் கொம்புகள் அழகு!

இருவரும்: வண்ணத்துப்பூச்சி சிறுவர் பூங்காவிற்குள் செல்லலாமே!

( பறவைகளையும் மான்களையும் பார்த்து மகிழ்ந்தனர் )



**நங்கை:** அதோ, அந்த அறிவிப்புப்பலகையைப் பார். வித்தியாசமாக உள்ளதல்லவா ?




**மங்கை :** ஆம், நங்கை. நாம் விலங்குகளுக்குத் தொல்லை தரக் கூடாது என்பதற்கான அறிவிப்பு அது. அதோ, நெகிழிப்பயன்பாட்டைக் குறிக்கும் இன்னொரு அறிவிப்பைப் பார்.

பிளாஸ்டிக் மற்றும் பாலிதின் பை
பூங்காவினுள் அனுமதி கிடையாது.

**நங்கை :** அறிவிப்பில் பிளாஸ்டிக் என்று உள்ளதே!

**மங்கை :** பிளாஸ்டிக் என்பதைத் தமிழில் 'நெகிழி' என்று அழைப்பார்கள்.

**நங்கை :** இன்றுமுதல் நாம் நெகிழிப் பயன்பாட்டை விட்டுவிட வேண்டும். அதற்கு நாம் உறுதிமொழி எடுத்துக்கொள்வோம்.

( இருவரும் ‘வண்ணத்துப்பூச்சி சிறுவர் பூங்கா’ விற்குள் சிறிது நேரம் விளையாடி மகிழ்ந்தனர்)




**மங்கை :** அதோ! சிறுவர் பூங்காவில் இருந்து வெளியே செல்லும் வழி குறிக்கப்பட்டுள்ளது.

( சிறுவர் பூங்காவிலிருந்து இருவரும் வெளியேறி, பேருந்தில் பயணம் செய்கின்றனர்)



**நங்கை :** சாலையின் நடுவே போக்குவரத்துக் குறியீடு உள்ளதே!

**மங்கை :** சிவப்புவிளக்கு ஒளிர்ந்தவுடன் பேருந்து நிற்கும், மஞ்சள் விளக்கு ஒளிர்ந்தவுடன் புறப்படத் தயாராகும், பச்சைவிளக்கு ஒளிர்ந்தவுடன் புறப்பட்டுச் செல்லும்.

நங்கை : அதோ! சாலையின் குறுக்கே கோடுகள் உள்ளனவே.

மங்கை : சாலையில் நடந்து செல்பவர்கள் சாலையைக் கடக்கும் வழி அது. போக்குவரத்து நிறைந்த சாலைகளில் நடந்து செல்பவர்களுக்கு இப்பாதை மிகுந்த பயனைத்தரும்.



( சாலையில் மேலும் சில குறியீடுகளைக் காண்கின்றனர்)

மருத்துவமனை உள்ளது
ஒலி எழுப்பாதே



பள்ளிப்பகுதி மெதுவாகச்
செல்லவும்



இடப்பக்கம் திரும்புக



மங்கை : அதோ! கைத்தறித் துறையின் விளம்பரத்தைப் படித்தாயா?

நங்கை : இதேபோன்று நான் வானொலியிலும் தொலைக்காட்சியிலும் விளம்பரங்களைக் கேட்டு உள்ளேன். நாளிதழ்களிலும் படித்துள்ளேன். இன்று உன்னுடன் சேர்ந்து சாலை , பொதுஇடங்களில் உள்ள அறிவிப்புகள், விளம்பரங்கள் மற்றும் சாலைக்குறியீடுகள் பற்றி அறிந்துகொண்டேன். இதுவரை நான் சாலைக்குறியீடுகளைப் படிப்பதில் கவனம் செலுத்தவில்லை. இனிமேல் நான், தவறாமல் அவற்றைப் படித்துப் பல புதிய செய்திகளை அறிந்து கொள்வேன்.




மங்கை : அதற்காகவே நமது அரசு இதைப்போன்ற அறிவிப்புகளையும் விளம்பரங்களையும் வைத்துள்ளது. அதனைப்படித்து நாம் பயன்பெறுவோம்!

## பயிற்சிகள்

### அ) அகரமுதலியைப் பார்த்துப் பொருள் அறிவோம்.

எடுத்துக்காட்டு : ஆவல் – விருப்பம்

1. பூங்கா –
2. உயிரியல் –

### ஆ) சேர்த்து எழுதுங்கள்.

எடுத்துக்காட்டு: அனுமதி + சீட்டு = அனுமதிச்சீட்டு

1. வண்ணத்து + பூச்சி =
2. பள்ளி + பகுதி =
3. நுழைவு + கட்டணம் =
4. எடுத்து + கொள்வோம் =

### இ) ஓரிரு சொற்களில் விடையளித்திடுக.

1. தோழிகள் இருவரும் முதன் முதலில் சென்ற இடம் எது ?
2. மருத்துவமனைக்கு அருகே உள்ள குறியீட்டை எழுதுக.
3. பள்ளிப் பகுதியில் உள்ள குறியீடு எதை உணர்த்துகிறது ?
4. போக்குவரத்துக் குறியீட்டில் சிவப்பு விளக்கு ஒளிர்ந்தவுடன் நாம் என்ன செய்ய வேண்டும் ?
5. தோழிகள் இருவரும் எடுத்துக் கொண்ட உறுதிமொழி யாது ?

### ஈ) விளையாடுவோம்.

வகுப்பறையில் மாணவர்களை இரண்டு குழுக்களாகப் பிரித்திடுக. போக்குவரத்து சாலைக்குறியீடுகளைத் தனியாகவும், விளக்க அட்டைகளைத் தனியாகவும் வைத்திடுக. முதல்குழுவில் ஒரு மாணவனைக் குறியீடு அட்டைகளில் ஏதேனும், ஒரு குறியீடு அட்டையை எடுத்துக் காட்டச் செய்க. இரண்டாவது குழுவில் உள்ளவர்களில் ஒருவரைக் குறியீட்டிற்கு ஏற்ற சரியான விளக்க அட்டையை எடுத்துப் பொருத்திக் காட்டச்செய்க.

### உ) கீழே கொடுக்கப்பட்டுள்ள இடத்திற்கேற்ற அறிவிப்புகளை எழுதுங்கள்.

மருத்துவமனை



______________

நூலகம்



______________

பூங்கா



______________

( ஒலி எழுப்பாதே, புல் தரையில் நடக்காதீர்கள், அமைதி காக்க வேண்டும் )

# 9. நேர்மை தந்த பரிசு

சீனாவில் ஓர் இளவரசன் இருந்தான். அவன் நாட்டிற்கு அரசனாகப் பொறுப்பேற்கும்முன் திருமணம் செய்துகொள்ள முடிவெடுத்தான். அவன் திருமணம் செய்து கொள்ளும் பெண்ணே அந்நாட்டிற்குப் பேரரசி. எனவே, மிகவும் நேர்மையான ஒரு பெண்ணைத் தேர்வு செய்யத் தீர்மானித்தான். அதற்காகப் பெரியோர்களின் அறிவுரைப்படி அந்நாட்டிலுள்ள இளம்பெண்களை அழைத்தான். அழைப்பை ஏற்று வந்திருந்த பெண்களிடம் இளவரசன் தன் திட்டத்தை அறிவித்தான்.



"பெண்களே..... உங்கள் ஒவ்வொருவருக்கும் ஒரு விதை தருகிறேன். இதனை ஆறு மாதங்களில் யார் நன்றாக வளர்க்கிறாரோ அவரையே இந்நாட்டின் பேரரசியாகத் தேர்வு செய்வேன்" என்றான். ஆளுக்கொரு விதையைக் கொடுத்தான்.

அந்த அரண்மனையில் பணியாற்றும் ஏழைப் பணிப்பெண்ணின் மகளும் இளவரசனின் அறிவிப்பைக் கேட்டு, அந்த விதையைப் பெற்றாள். அதனை வீட்டிற்கு எடுத்துச் சென்று தொட்டியில் மண் நிரப்பி, நீர்த் தெளித்து, விதையை அதில் ஊன்றினாள். கண்ணுங்கருத்துமாகப் பார்த்து வந்தாள். அவள் உழைப்பிற்கு ஏற்ப பெரிய மலர்கள் மலர வேண்டும் என்று எப்போதும் நினைத்தாள். மூன்று மாதங்கள் சென்றன. விதை சிறிதும் முளைக்கவில்லை. கவலையுற்ற அவளோ, உழவர்கள் சிலரிடம் சென்றாள். அவர்களிடம் செடி வளர்ப்பது குறித்துக் கேட்டாள். அதன்படியும் முயன்றாள். ஆனால் ஒரு பயனும் இல்லை.

இறுதியாக ஆறு மாதங்களும் கழிந்தன. இளவரசன் குறிப்பிட்ட அந்த நாளும் வந்தது. கவனத்துடன் தன் உழைப்பைச் செலுத்தியும் செடி முளைக்கவில்லை. ஆனாலும், செடியில்லாத மண் தொட்டியுடன் அரண்மனைக்குச் சென்றாள். அவளைத் தவிர மற்ற பெண்கள் அனைவரும் வண்ணவண்ண மலர்கள் மலர்ந்த அழகிய பூந்தொட்டியுடன் வந்திருந்தனர்.

இளவரசன் வந்தான். மற்றவர்கள் வைத்திருக்கும் மலர்த் தொட்டிகளைப் பார்த்தான். பணிப்பெண்ணின் மகள் வைத்திருந்த மண்தொட்டியையும் பார்த்துவிட்டுத் தன் முடிவினை அறிவித்தான். "வெறுந்தொட்டியுடன் வந்த பெண்ணையே பேரரசியாகத் தேர்வு செய்துள்ளேன்" என்றான்.

மற்றபெண்கள் இதனை எதிர்த்தனர். "ஒன்றுமே முளைக்காத வெறுந்தொட்டியுடன் வந்தவளை எப்படிப் பேரரசியாக்க முடியும், " என்று வினவினர்.



இளவரசனோ மிகவும் பொறுமையாக, "இந்தப் பெண் மட்டுந்தான் நேர்மை என்னும் மலரைப் பயிர் செய்தாள். ஆம்! நான் கொடுத்த விதைகள் எல்லாம் முளைக்காத விதைகளே" என்றான். மற்ற பெண்கள் ஒன்றும் கூறமுடியாமல் அமைதியாக நின்றனர்.

## பயிற்சிகள்

### அ) அகரமுதலியைப் பார்த்துப் பொருள் கூறுங்கள், எழுதுங்கள்.

1. பணிப்பெண் = ____________________
2. அரண்மனை = ____________________
3. நேர்மை = ____________________

### ஆ) சேர்த்து எழுதுங்கள்.

எடுத்துக்காட்டு: பொறுப்பு + ஏற்கும் = பொறுப்பேற்கும்.

1. பணி + பெண் = ____________________
2. கேட்டு + அறிந்தாள் = ____________________
3. முழு + கவனத்துடன் = ____________________
4. பூ + தொட்டி = ____________________

### இ) பிரித்து எழுதுங்கள்.

எடுத்துக்காட்டு : அறிவிப்பைக் கேட்டு = அறிவிப்பை + கேட்டு

1. விதையைப்பெற்றாள் = ____________________
2. செடியில்லாத = ____________________
3. மண்தொட்டி = ____________________
4. மலர்த்தொட்டி = ____________________

### ஈ) ஓரிரு சொற்கள்/ சொற்றொடர்களில் வினாக்களுக்கு விடை எழுதுங்கள்.

1. இளவரசன் போட்டியில் பங்கேற்க வந்தவர்களிடம் என்ன கொடுத்தான்?
2. பணிப்பெண்ணின் மகள் விதையை எடுத்துச் சென்று என்ன செய்தாள்?
3. விதையை முளைக்க வைக்க யாரிடம் சென்று அறிவுரை கேட்டாள்?
4. பேரரசியாக இளவரசன் யாரைத் தேர்வு செய்தான்?
5. ஏழைப் பெண்ணைப் பேரரசியாகத் தேர்வு செய்ய இளவரசன் சொன்ன காரணம் என்ன?

### உ) விடுபட்ட சொற்களைக் கீழ்க்காணும் குறிப்புகளைக் கொண்டு நிரப்புவோம்.

( தூண்டில், மீன்கொத்தி, காகம், தாமரை மலர்கள், மையப்பகுதி, மரங்கள் )



எங்கள் ஊரில் உள்ள நீர் நிரம்பிய குளத்தில் சிவப்பு, வெள்ளைத்____________ அழகாகப் பூத்திருக்கின்றன. குளக்கரையின் நான்கு பக்கமும் ____________உள்ளன. மரத்தின் மீது ____________, ____________போன்ற பறவைகள் அமர்ந்து இருக்கின்றன. குளக்கரையில் அமர்ந்து ஒருவர் ____________ போட்டு மீன் பிடித்துக் கொண்டிருக்கிறார். சிலர் குளத்தின் ____________ வரை நீந்திச் செல்கின்றனர். தாமரைக் குளம்தான் எவ்வளவு அழகு!

## 10. மானின் விடுதலை

பையன் : புள்ளி மானே, கோபம் நீ கொள்வ தேனோ, கூறுவாய் ?

மான் : கட்டவிழ்த்து விட்டிடு
காட்டை நோக்கிப் போகிறேன்

பையன் : ஒரு வினாடி கூட நான்
உன்னை விட்டிருப்பேனோ ?

மான் : உடனே நீயும் புறப்படு
ஒன்றாக காடு செல்லலாம்



பையன் : காட்டை நோக்கிப் போகவா ?
கல்லும் முள்ளும் குத்துமே!
அம்மா, அப்பா, பாட்டியை
ஐயோ, விட்டு வருவதோ ?
இருட்டிப்போனால் விளக்குமே
இல்லை அந்தக்காட்டிலே
சிங்கம், கரடி, புலியுமே
சீறிவந்து கடிக்குமே

மான் : அப்படித்தான் எனக்குமே
அதிகக் கஷ்டம் இல்லையோ ?
சுற்றத்தார்கள் வருவரோ
துள்ளிச் சுற்ற முடியுமோ ?
ஆசை கொண்ட உணவையும்
அடைத்துத் தின்னக் கூடுமோ ?
கழுத்து நோக என்னை யார்
காட்டில் கட்டிப்போடுவார் ?

(இதைக் கேட்ட அவன் மனம்
இளகிப் போச்சு மெத்தவும்)



பையன் : 'ஐயோ பாவம் ஐயையோ!
அவிழ்த்து விட்டேன் ஓடிடு
என்று கூறிக் கழுத்திலே
இருந்த கட்டவிழ்த்தனன்.
காட்டை நோக்கி மகிழ்வுடன்
காற்றைப் போல ஓடிடும்
மானைக் கண்டு அவனுமே
மகிழ்ச்சி கொள்ளலாயினான்!

-அழ. வள்ளியப்பா

## பயிற்சிகள்

### அ) அகரமுதலியைப் பார்த்து பொருள் அறிவோம்.

எடுத்துக்காட்டு : கட்டவிழ்த்து = விடுவித்து

1. நோக = ____________
2. மெத்தவும் = ____________

### ஆ) பிரித்து எழுதுங்கள்.

எடுத்துக்காட்டு : கொள்வதேனோ = கொள்வது + ஏனோ

1. விட்டிருப்பேனோ = ________ + ________
2. நோக்கிப்போகவா = ________ + ________
3. இருட்டிப் போனால் = ________ + ________

### இ) சேர்த்து எழுதுங்கள்.


எடுத்துக்காட்டு : அந்த + காட்டில் = அந்தக்காட்டில்

1. தின்ன + கூடுமோ = ____________
2. கட்டி + போடுவார் = ____________
3. மானை + கண்டு = ____________

### ஈ) கதைப்பாடலில் உள்ள நன்னெறியைக் கூறுங்கள் , எழுதுங்கள்.

____________________ ____________________

### உ) சிறகை விரித்துப் பறக்கும் பறவை செய்வோம்




**எப்படிச் செய்வது ?**

ஒரு பறவையின் உடல் மற்றும் இறக்கை வடிவங்கள் கொடுக்கப்பட்டுள்ளன. அவற்றைத் தனித்தனியே வரைந்து / படியெடுத்து அவற்றிற்கு வண்ணம் தீட்டவும். பிறகு அவ்வடிவங்களைத் தனித்தனியே அட்டையில் ஒட்டி, கத்தரிக்கோலால் கவனமாக வெட்டி எடுக்கவும்.

அடுத்து, பறவையின் உடற்பகுதியில் படம் ஒன்றில் காட்டியுள்ள இடத்தில் நீண்ட பிளவு செய்யவும். பிறகு, படம் இரண்டில் காட்டியுள்ளபடி இறக்கைத் துண்டை அந்த நீண்டபிளவில் செருகிப் பொருத்தவும்.

அடுத்து, படம் மூன்றில் காட்டியுள்ள இடத்தில் துளை செய்து நூலின் ஒரு முனையை அதன் வழியாகச் செலுத்திக் கட்டவும். இப்போது பறவையை உயரத்தில் கட்டித் தொங்க விட்டால் நீங்கள் செய்த பறவை பறப்பதைப் பார்க்கலாம்.



# 11. மல்லிகை உணவகம்

முதல் நாள்




**செந்தில் :** காலைச்சிற்றுண்டி உண்பதற்காக உணவகம் சென்றான். அங்கே தனக்குத் தேவையான இரண்டுதோசைகளை வாங்கிச் சாப்பிட்டுக் கொண்டே "ஐயா தோசைக்குச் சர்க்கரை கொண்டு வாருங்கள்" எனக்கேட்டான்.

**கடைக்காரர் :** தம்பி! நீங்கள் அறிவிப்புப் பலகையைப் பார்க்கவில்லையா? இன்று முதல்தோசைக்குச் சர்க்கரை இல்லை, என்று எழுதிப் போட்டிருக்கிறோமே!

**செந்தில் :** ஐயா, அறிவிப்புப்பலகையைப் படித்துவிட்டுத்தான் முதல் தோசையைச் சாப்பிட்டு விட்டு, இரண்டாவது தோசைக்குச் சர்க்கரை கேட்கிறேன்.

கடைக்காரர் : நீங்கள் சொல்வது ஒன்றும் புரியவில்லையே தம்பி.

செந்தில் : ஐயா, அறிவிப்புப் பலகையைப் பாருங்கள்.

"இன்று முதல்தோசைக்குச் சர்க்கரை இல்லை" என்றுதானே எழுதப்பட்டுள்ளது. அப்படியென்றால், இரண்டாவது தோசைக்குச் சர்க்கரை உண்டு என்றுதானே பொருள். அதனால்தான், இரண்டாவது தோசைக்குச் சர்க்கரை கேட்டேன்.

கடைக்காரர் : ஆகா! இப்படியும் பொருள் கொள்ளலாமோ! நல்லது தம்பி, நாளை அறிவிப்புப் பலகையை மாற்றி விடுகிறோம்".

(கடைக்காரர் சர்க்கரையை எடுத்துவந்து செந்தில் சாப்பிடும் தோசைத்தட்டில் வைத்தார்.)

இரண்டாம் நாள் :

செந்தில் : அடுத்தநாளும் சிற்றுண்டி உண்ண அதே மல்லிகை உணவகத்திற்குச் செல்கிறான். அங்கே சுவரில் தொங்கவிடப் பட்டஅறிவிப்பைப் படித்துவிட்டுத் தோசை வாங்கிச் சாப்பிட்டுக்கொண்டே " தோசைக்குச் சர்க்கரை கொண்டு வாருங்கள்"

கடைக்காரர் : தம்பி, அறிவிப்புப்பலகையைப் படியுங்கள்.
இனி மேல்தோசைக்குச் சர்க்கரை இல்லை என எழுதியிருக்கிறோமே!

செந்தில் : அதனால்தான் ஐயா! மேல் தோசையைச் சாப்பிட்டு விட்டுக் கீழ்த் தோசைக்குச் சர்க்கரை கேட்கிறேன்.

கடைக்காரர் : அடடே, இப்படியும் பொருள்கொள்ள வாய்ப்பு இருக்கிறதா? நாளையும் அறிவிப்புப்பலகையை மாற்ற வேண்டுமோ? (எப்படி மாற்றுவது எனச் சிந்தித்தபடி செந்திலுக்குச் சர்க்கரை எடுத்துவந்து தருகிறார்.)

அறிவிப்புப்பலகையில் பொருள் மாறாமல் இருக்க, சொற்களுக்கு இடையே எவ்வாறு இடைவெளிவிட்டு எழுத வேண்டும் என்று, கடைக்காரருக்கு உதவுங்களேன்.

## பயிற்சிகள்

### அ) அகரமுதலியைப் பார்த்துப் பொருள் கூறுங்கள், எழுதுங்கள்.

1. உணவகம் = ________________
2. சிற்றுண்டி = ________________

### ஆ) பிரித்து எழுதுங்கள்.

எடுத்துக்காட்டு : காலைச்சிற்றுண்டி = காலை + சிற்றுண்டி

1. அறிவிப்புப்பலகை = __________ + __________
2. எடுத்துவந்தார் = __________ + __________
3. சாப்பிட்டுக்கொண்டே = __________ + __________

### இ) விடை எழுதுங்கள்.

1. முதல்நாள் அறிவிப்புப் பலகையில் என்ன எழுதப்பட்டிருந்தது ?
2. கடைக்காரர் இரண்டாம் நாள் அறிவிப்புப்பலகையை எவ்வாறு மாற்றினார் ?
3. கடைக்காரருக்கு இரண்டாம் நாள் செந்தில் கூறிய பதில் யாது ?

### ஈ) சொற்கள் இணைந்தால் ஒரு பொருள், பிரித்தால் வேறுபொருள் சொற்களைப் பிரித்து வேறுபொருள் அறியுங்கள்.

எடுத்துக்காட்டு :

| சொற்கள் | | பொருள்கள் | |
|---|---|---|---|
| வெங்காயத்தாமரை | – | வெங்காயம் | தாமரை |
| 1. செங்கல்பட்டு | – | | |
| 2. ஆடுதுறை | – | | |
| 3. பலகை | – | | |
| 4. கடிகாரம் | – | | |
| 5. வைகை | – | | |

### உ) சொற்களை ஒன்று சேர்த்துப் பொருள் காணுங்கள்.

எடுத்துக்காட்டு:

சாப்பா டுப்போ டப்ப டும் – சாப்பாடுப் போடப்படும்

1. மரத் தைப்பி டிங்கினான்.
2. ஆற்றோ ரமரக் கிளையிலொ ருகுரு விக்கூ விக்கூடு.
3. விளையா டுமிடமெல் லாம்பட் டாம்பூச்சி.

## ஊ) சரியான விடையை எடுத்தெழுதுங்கள்.

1. முதல்நாள் செந்தில், கடைக்காரருக்குக் கூறிய பதில்

______________________________________

அ) சர்க்கரை கட்டாயம் வேண்டும்.

ஆ) இரண்டாவது தோசைக்குத்தானே சர்க்கரை கேட்டேன்.

இ) எனக்குக் காரம் பிடிக்காது.

2. இரண்டாம்நாள் செந்தில், கடைக்காரருக்குக் கூறிய பதில்.

______________________________________

அ) இரண்டு தோசைக்கும் சர்க்கரை வேண்டும்.

ஆ) சர்க்கரைதான் எனக்குப் பிடிக்கும்.

இ) கீழ்த்தோசைக்குத்தான் சர்க்கரை வேண்டும்.

## எ) பொருள் மாறுபடுமாறு வேறு தொடர் எழுதுங்கள்.

எடுத்துக்காட்டு:

அ) தங்கம், அத்தை வீட்டிற்குச் சென்றாள்.

(தங்கம் என்ற பெண் அவளுடைய அத்தை வீட்டிற்குச் சென்றாள்)


ஆ) தங்கம் அத்தை, வீட்டிற்குச் சென்றாள்.

(தங்கம் என்ற பெயருடைய அத்தை அவளுடைய வீட்டிற்குச் சென்றாள்)

1. அ) இங்குப் பசுநெய் கிடைக்கும்.

ஆ) இங்குப் பசு, ______________ கிடைக்கும்.

## ஏ) சொற்களை இணைத்து நிலாவை வருணிப்போமே!




______________________________

______________________________

______________________________

______________________________

______________________________

# 12. விட்டுக்கொடு விருப்பமுடன்

அடர்ந்தகாட்டில் நீர்ச்சுனை ஒன்று இருந்தது. அதில் தண்ணீர் குடிப்பதற்குச் சிறுத்தை ஒன்று வந்தது. அப்போது காட்டெருமை ஒன்றும் அங்கே வந்தது. காட்டெருமையைக் கண்ட சிறுத்தை, பேரொலி எழுப்பி 'நான்தான் முதலில் தண்ணீர் குடிப்பேன்' என்றது. இதைக் கேட்ட காட்டெருமை பயப்படவில்லை.



சிறுத்தை, காட்டெருமை இரண்டுக்கும் இடையே பெரிய சொற்போர் எழுந்தது; இவற்றின் வாய்ச் சண்டையைக் கேட்டு, வானில் பறந்து கொண்டிருந்த கழுகுகள் வந்து கூடின. தலைவனாக இருந்த கழுகு மற்ற கழுகுகளிடம், “இவற்றிற்கிடையே இன்னும் சற்று நேரத்தில் பெருஞ்சண்டை ஏற்படப் போகிறது. அப்போது அவை அடிதடியில் ஈடுபடும். இறுதி வெற்றி யாருக்கு முடிந்தாலும் நமக்குக் கவலை இல்லை. ஏனென்றால், தோற்ற விலங்கு நமக்கு உணவாகும் ,” என்றது.

இதை எல்லாம் கவனிக்காத சிறுத்தையும் காட்டெருமையும் கடுஞ்சண்டையில் இறங்கின. அவை கடுமையாகத் தாக்கிக் கொண்டன. வெற்றி, தோல்வி என்ற பேச்சுக்கே இடமின்றிப் பெரும்போர் நிகழ்ந்தது.

சிறிதுநேரத்தில், தற்செயலாக இரண்டும் கழுகுக் கூட்டத்தைக் கவனித்தன. கழுகுகளின் எண்ணம் அவற்றிற்குப் புலப்பட்டது. காட்டெருமை, சிறுத்தையிடம் 'இதோ நம்மில் யார் இறந்தாலும் சாப்பிடுவதற்கு அமர்ந்திருக்கும் கழுகுக் கூட்டத்தைப் பார்' என்றது.

இதைக்கேட்ட சிறுத்தை, 'உண்மைதான்! நாம் இருவரும் விலங்குகள். அவை பறவைகள். ஆயிரம்தான் நமக்குள் பகை இருந்தாலும் எதிரிக்குச் சிறிதும் இடம் கொடுத்துவிடக் கூடாது. இப்போதிலிருந்து நாம் நண்பர்கள்' என்றது. 'மாற்றானுக்கு இடம் கொடேல்' என்று அறிஞர்களும் சொல்லுவார்கள். ஆகவே, 'இன்றுமுதல், நாம் இருவரும் நண்பர்கள்' என்று காட்டெருமை கூறியது. இரண்டும் விட்டுக்கொடுத்து நீர் அருந்தின; ஒற்றுமையாகச் சேர்ந்து சென்றன.

## பயிற்சிகள்

### அ) அகரமுதலியைப் பார்த்துப் பொருள் அறியுங்கள்.

எடுத்துக்காட்டு : அடர்ந்த = நெருங்கிய

1. நீர்ச்சுனை = ______________
2. பேரொலி = ______________
3. மாற்றான் = ______________
4. கொடேல் = ______________
5. வல்லவன் = ______________

### ஆ) பிரித்து எழுதுங்கள்.

எடுத்துக்காட்டு : சொற்போர் = சொல் + போர்

1. பொருட்டல்ல = ________ + ________
2. இடமின்றி = ________ + ________
3. ஏனென்றால் = ________ + ________
4. பெருஞ்சண்டை = ________ + ________

### இ) சேர்த்து எழுதுங்கள்.

எடுத்துக்காட்டு : கேட்க + இல்லை = கேட்கவில்லை

1. வாய் + சண்டை = ______________
2. அமர்ந்து + இருக்கும் = ______________
3. ஒன்றை + ஒன்று = ______________

## ஈ) வினாக்களுக்கு விடையளியுங்கள்

1. சிறுத்தையும் காட்டெருமையும் எங்குச் சென்றன?
2. காட்டெருமையிடம் சிறுத்தை கூறியது என்ன?
3. கழுகுத்தலைவன் மற்றக் கழுகுகளிடம் கூறியது என்ன?
4. சிறுத்தையும் காட்டெருமையும் தற்செயலாக எவற்றைக் கவனித்தன?
5. 'விட்டுக்கொடு விருப்பமுடன்' – பாடம் உணர்த்தும் நன்னெறி யாது?

## உ) நீங்களும் கதையைத் தொடரலாம்.

பாதிக்கதையைப் படித்து மீதிக் கதையை எழுதுங்கள்.

மணி, மாதவன் இருவரும் நண்பர்கள். அன்று விடுமுறை. காய்கறி வாங்க இருவரும் சந்தைக்குச் சென்றனர். வழியில் நாய் ஒன்று பசியுடன் இருந்ததைப் பார்த்தனர். மணி, நாய்க்கு உதவ எண்ணி தன்னிடம் இருந்த இட்டலிகளைக் கொடுத்தான். மிகவும் பசியோடு இருந்த அந்த நாய் எல்லா இட்டலிகளையும் தின்று பசி தீர்ந்தது; மகிழ்வுடன் வாலைக் குழைத்து நின்றது.



இருவரும் சந்தையில் நுழைந்த நேரம், மாதவன் திடுக்கிட்டான். தன் பணப்பையைக் காணாது பதறினான்.

அப்போது ______________________________

______________________________

______________________________

______________________________

______________________________

______________________________

( இக்கதைக்குப் பொருத்தமானதொரு தலைப்பை எழுதுங்கள் )

# 13. பள்ளியிலே கொண்டாட்டம்

நண்பகல் உணவு இடைவேளை முடிந்து, பள்ளி மணி ஒலித்தது. ஆசிரியர் வகுப்பிற்குள் நுழைந்தார். தேவியும் தாமரையும் ஒன்றாக அமர்ந்து ஓவியம் வரைந்து கொண்டிருந்தனர். ஆசிரியர், அருகே சென்று கையொலி எழுப்பியபடி 'அருமை, மிகவும் நன்றாக வரைகிறீர்கள். சரியான நேரத்தில்தான் ஓவியம் வரைந்து பயிற்சி செய்து கொண்டிருக்கிறீர்கள். ஆண்டு விழாவிற்கு இன்னும் பத்து நாள்களே இருக்கின்றன அல்லவா, வேலன் ?'

வேலன் : ஆம் அம்மா.. நான் பேச்சுப் போட்டியில் கலந்து கொள்ளலாமா ?



ஆசிரியர் : கலந்து கொள்ளலாமே ?

மாதவி : நான், நாட்டியப் பயிற்சிப் பள்ளிக்குச் சென்று ஆடல், பயின்று வருகிறேன். அதனால், நான் ஆடல் போட்டியில் பங்கேற்கலாமா ?

ஆசிரியர் : உறுதியாகப் பங்கேற்கலாம் மாதவி. சரி, நாம் இப்போது ஆண்டு விழாவிற்கு நம் வகுப்பு மாணவர்களின் பங்களிப்பு என்னென்ன என்பது குறித்துப் பேசுவோம். அன்பரசி! ஆண்டு விழாவில் நீ எந்தப் போட்டியில் பங்கேற்க உள்ளாய் ?

அன்பரசி : அம்மா! நான் ஜான்சிஇராணி இலட்சுமிபாயாக வேடமிட்டுப் போட்டி யில் பங்கேற்கலாம் என எண்ணுகிறேன்.



ஆசிரியர் : அருமை! முதல் இந்திய விடுதலைப் போரில் ஆங்கிலேயரை எதிர்த்துப் போரிட்ட முதல் வீரப்பெண்மணி ஆயிற்றே. அதுமட்டுமா, கையில் வாளேந்தி, முதுகில் குழந்தையைச் சுமந்து குதிரையில் ஏறி, வீரமுடன் போரிட்ட ஜான்சி ராணியாக விழாவில் நாம் அன்பரசியைப் பார்க்கலாம் !

பாண்டியன் : அம்மா, நான் வீரபாண்டியகட்டபொம்மனாக வேடம் போட்டு, 'எங்களுடன் வயலுக்கு வந்தாயா ? நாற்று நட்டாயா ? களை பறித்தாயா ? உமக்கேன் கொடுக்க வேண்டும் திறை ?' என்று வீரமாகப் பேசப் போகிறேன்.

முருகன் : நான் அண்ணல் காந்தியடிகளாகத் தடியூன்றி வந்து, அன்பு நெறி பற்றிப் பேசி நடித்துக்காட்டுவேன்.

ஆசிரியர் : சரி! இவை தவிர, ஓட்டப்பந்தயம், கயிறு தாண்டுதல், கோ – கோ, நீளம் தாண்டுதல், உயரம் தாண்டுதல், தவளை ஓட்டம், ஊசி நூல் இணைத்தல், எலுமிச்சம்பழமும் கரண்டியும் போன்ற விளையாட்டுப் போட்டிகளும் உள்ளன. இவற்றில் எல்லாம் சேர விருப்பம் உள்ளவர்கள் கைகளை உயர்த்துங்கள். நான் பெயர் எழுதிக்கொள்கிறேன் என்று உரைத்தார்.

( மாணவர்களில் பலர், கைகளை உயர்த்துகின்றனர். ஆசிரியர், அவர்களின் பெயர்களைத் தம் குறிப்பேட்டில் எழுதிக் கொள்கிறார்)

ஆசிரியர் : அன்பு மாணவர்களே! ஆண்டுவிழா வரும்வரை ஒவ்வொரு நாளும் மாலைநேரத்தில் கலை நிகழ்ச்சிகள், விளையாட்டுப் போட்டிகளுக்கான பயிற்சியை இன்றிலிருந்தே தொடங்குங்கள். அப்போதுதான் எல்லாவற்றிலும் சிறப்பாக வெற்றிபெற முடியும்.

## பயிற்சிகள்

### அ) பிரித்து எழுதுங்கள்.

எடுத்துக்காட்டு : கையொலி = கை + ஒலி

1. பேச்சுப்போட்டி = ________ + ________
2. நாட்டியப்பயிற்சி = ________ + ________
3. தடியூன்றி = ________ + ________

### ஆ) வினாக்களுக்கு விடையளியுங்கள்.

1. மாதவி எங்கே சென்று நடனம் பயின்று வருவதாகக் கூறினாள்?
2. மாறுவேடப் போட்டியில் முருகன் யாரைப்போல் வேடமிடுவதாகக் கூறினான்?
3. பள்ளியில் என்னென்ன விளையாட்டுப் போட்டிகள் நடைபெற உள்ளன?

### இ) சொற்களுடன் அதன் பொருளைச் சரியாகப் பொருத்துங்கள்.

1. திறை – கூறுதல்
2. விருப்பம் – நடனம்
3. உரைத்தல் – ஆவல்
4. நாட்டியம் – வரி

ஈ) விடுபட்ட இடங்களில் கீழுள்ள அடைப்புக்குள் இருக்கும் சொற்களைக் கொண்டு நிரப்புங்கள்! கலந்துரையாடுங்கள்.

( பூங்குழலி, கதிர், அறிவழகன் மூவரும் ஆற்றங்கரையில் அமர்ந்து உரையாடுகின்றனர்.)

பூங்குழலி : ஆற்றில் எவ்வளவு தண்ணீர்__________ ஓடுகிறது பாரேன்!

அறிவழகன் : ஆமாம், பார்ப்பதற்கு எவ்வளவு __________ இருக்கிறது.

கதிர் : __________உள்ள மரங்களும் கூட அழகுதான்.

பூங்குழலி : அந்த மரத்தில் பார்! __________ கூடுகட்டி வாழ்கின்றன.

அறிவழகன் : கரையில் வளர்ந்துள்ள புல்லை __________ மேய்வதைப் பார்.

கதிர் : நேரம் போனதே தெரியவில்லை.

பூங்குழலி : ஆம்! இதுவரை ஆற்றங்கரை பற்றிப் பேசிமகிழ்ந்தோம்.

அறிவழகன் : இப்போது விடை பெறுவோம். நாளை சந்திப்போம்.

( ஆற்றங்கரையில், அழகாக, பறவைகள், மகிழ்வாக, பெருக்கெடுத்து, ஆடுமாடுகள் )

உ) கீழ்க்காணும் சொற்களைப் பயன்படுத்தி வகுப்பறைத் தூய்மை குறித்துக் கலந்துரையாடுங்கள்.

( உட்காரும் பாய்கள், குப்பைகள், கரும்பலகைத் தூய்மை, ஒட்டடைக்குச்சி, கலைந்து கிடக்கும் காலணிகள் ).

# 14. ஏற்காடு செல்வோம்

பகல்பொழுதில், கதிரவனின் வெப்பம் புவியைத் தாக்குகிறது. அப்பப்பா! எவ்வளவு வெப்பம். சாதாரணமான காலத்திலேயே இவ்வளவு வெப்பம் என்றால், கோடைக்காலத்தில் வெப்பம் இன்னும் மிகுதி. மக்கள், கோடை வெப்பத்திலிருந்து தங்களைக் காத்துக்கொள்ள மலைவாழிடங்களுக்குச் செல்கின்றனர். கோடைக்காலத்தை அங்கே மகிழ்ச்சியாகக் கழிக்கின்றனர். அப்படிச் செல்லும் மலைவாழிடங்களில் ஒன்று ஏற்காடு.



ஏற்காடு, சேலம் மாவட்டத்தில் சேர்வராயன் மலைத்தொடரில் உள்ளது. இது சேலத்திலிருந்து முப்பத்தைந்து கல் தொலைவில் உள்ளது. கடல்மட்டத்திலிருந்து நான்காயிரத்து முந்நூற்றுமுப்பதுஅடி உயரத்தில் உள்ளது. மலையிலிருந்து கீழே பார்த்தால் போக்குவரத்து வாகனங்கள் எறும்புபோல ஊர்ந்து செல்லும். கீழிருந்து ஏற்காடு மலைக்குச் செல்ல ,பேருந்துச் சாலை உள்ளது.



அச்சாலையில் இருபத்தெட்டுக் கொண்டைஊசி வளைவுகள் உள்ளன. இந்த வளைவுகளில் வளைந்துவளைந்து செல்லும் பேருந்துப் பயணம் புதுமையாகவும் இன்பமாகவும் இருக்கும். வானுயர்ந்த மலைகளும் சலசலவென ஓடும் நீரோடைகளும் உள்ளன. குளிர்ந்த தென்றல் வீசுகிறது. இவை உடலுக்கும் உள்ளத்திற்கும் மகிழ்ச்சியைத் தருகின்றன.





ஏற்காட்டில் பெரிய ஏரி உள்ளது. ஏரியில் படகுப்பயணம் செல்லலாம். மகிழ்ச்சியாக இருக்கும். படகு வீடுகள் மிக அழகானவை.





ஏற்காட்டில் அண்ணா பூங்கா உள்ளது. அங்கே பூத்துக்குலுங்கும் வண்ண வண்ண மலர்கள், உல்லாச ஊஞ்சல்கள், குழந்தைகள் விரும்பும் சறுக்கு விளையாட்டு அமைப்புகள் உள்ளன. ஆண்டுதோறும், மலர்க்கண்காட்சி மற்றும் பழக்கண்காட்சி நடைபெறுகின்றன.

மலர்க்கண்காட்சியில் பல அரியவகை மலர்கள் இடம்பெறும். மலர்களால் உருவாக்கப்பட்ட மயில், மங்கை, குதிரை போன்ற உருவங்கள் பலவும் அழகுக்காக வைக்கப்படும். பழக்கண்காட்சியில் பழங்களால் உருவாக்கப்பட்ட மயில், கடவுள் போன்ற உருவங்கள் மிக அருமையாக வடிவமைத்துக் காட்சிக்கு வைக்கப்படும்.



இவை மட்டுமா! இங்குச் சீமாட்டிமேடை, தொலைக்காட்சி நிலையம், பட்டு ஆராய்ச்சிப் பண்ணை, தோட்டக்கலைத் துறை, கிள்ளியூர் அருவி போன்றவை உள்ளன. எவ்வளவு அருமையான கோடைவாழிடம்! வாய்ப்புக் கிடைக்கும்போது கல்விச்சுற்றுலாவாகவும் பெற்றோருடனும் ஏற்காடு சென்று கண்டு மகிழ்வோம். அதன் இயற்கை எழில் சிதையாதவாறு சுற்றுச்சூழலைப் பாதுகாப்போம்!

## பயிற்சிகள்

### அ) அகர முதலியைப் பார்த்துப் பொருள் கூறுங்கள், எழுதுங்கள்.

1. கோடை = ____________
2. வளைவு = ____________
3. ஏரி = ____________
4. தொலைவு = ____________

### ஆ) ஓரிரு சொற்றொடர்களில் விடையளியுங்கள்.

1. ஏற்காடு எந்த மலைத்தொடரில் அமைந்துள்ளது ?
2. ஏற்காட்டில் நடைபெறும் கண்காட்சிகள் எவை ?
3. பூங்காவில் காணும் காட்சிகள் எவை ?
4. ஏற்காடு, கடல் மட்டத்தில் இருந்து எவ்வளவு உயரத்தில் உள்ளது ?
5. ஏற்காடு செல்லும் சாலையில் எத்தனை கொண்டைஊசி வளைவுகள் உள்ளன ?
6. ஏற்காட்டில் உள்ள அருவியின் பெயர் என்ன ?

### இ) சேர்த்து எழுதுங்கள்.

எடுத்துக்காட்டு : வான் + உயர்ந்த = வானுயர்ந்த

1. நீர் + ஓடை = ____________
2. மலையில் + இருந்து = ____________
3. கலை + துறை = ____________
4. தொலை + காட்சி = ____________

ஈ) பிரித்து எழுதுங்கள்.

எடுத்துக்காட்டு : மலைத்தொடர் = மலை + தொடர்

1. கீழிருந்து = ____________ + ____________
2. பூத்துக்குலுங்கும் = ____________ + ____________
3. மலர்க்கண்காட்சி = ____________ + ____________
4. படகுப்பயணம் = ____________ + ____________

உ) கொடுக்கப்பட்டுள்ள தொடர்களைப் பயன்படுத்திக் கோடிட்ட இடத்தை நிரப்புங்கள்.

(பட பட, சல சல, பச்சைப்பசேல், குடு குடு,)

1. நீரோடை ____________ என ஓடியது.
2. மரங்களும் தேயிலைத் தோட்டமும் ____________ என இருந்தன.
3. பறவைகள் தம் சிறகை ____________ என அடித்தன.
4. மாணவ, மாணவிகள் பூங்காவில் ____________ என ஓடினர்.

ஊ) நீங்கள் கண்டு மகிழ்ந்த ஒரு காட்சியைப் பற்றி நண்பர்களோடு உரையாடுங்கள்.

1. ஏரி 2. பூங்கா 3. அருவி

எ) பாடப் பகுதியில் இடம்பெற்றுள்ள ஈரெழுத்துச் சொற்களை எடுத்து எழுதுவோம்.

எடுத்துக்காட்டு : ஏரி

____________ , ____________ , ____________ ,

____________ , ____________ , ____________ ,

____________ , ____________ , ____________ ,

ஏ) பாடப் பகுதியில் இடம்பெற்றுள்ள மூன்று எழுத்துப் பெயர்ச்சொற்களை எடுத்து எழுதுங்கள். சொற்களுக்குரிய படங்களைத் திரட்டுங்கள், ஆசிரியர் உதவியுடன் கதை எழுதுங்கள்.

எடுத்துக்காட்டு: நீரோடை, மயில், மங்கை

____________ , ____________ , ____________ ,

____________ , ____________ , ____________ ,

____________ , ____________ , ____________ ,

# 15. சிறுவர்இதழ்களைப் படிப்போம்

வளவன் : தேன்மொழி! நீ 'சிறுவர் இதழ்' படித்தாயா?

தேன்மொழி : ஆமாம். எங்கள் வீட்டில் நாளிதழுடன் வந்த சிறுவர்இதழைப் படித்தேன்.

வளவன் : சிறுவர் இதழில் என்னென்ன படித்தாய்?

தேன்மொழி : சிறுகதைகள், பாடல்கள், புதிர்கள், துணுக்குகள் படித்தேன்.

வளவன் : அப்படியா! அதைப்பற்றி எனக்குக் கூறு.

தேன்மொழி : நாம் வகுப்பறையில் இன்று மகிழ்ச்சியாகப் படித்துக் கொண்டிருக்கிறோம். இதோ 'உலகம் நமது பள்ளிக்கூடம்' என்னும் பாடல் உள்ளது. படித்துப் பாரேன்!


**உலகம் நமது பள்ளிக்கூடம்**

அல்லி மலர் பூக்கும் குளத்திலே
ஆசையாக நீந்தலாம்..
இனிய இந்தக் குளக்கரையில்
ஈச்ச மரமும் பார்க்கலாம்!

உலகம் நமது பள்ளிக்கூடம்
ஊஞ்சல்கட்டி ஆடலாம்..
எந்த மரத்தின் கிளைகளிலும்
ஏணியின்றி ஏறலாம்!

ஐயமின்றி முத்தமிழை
ஒவ்வொன்றாகப் பயிலலாம்..
ஓடியாடி நாம் உழைத்தால்
ஔடதத்தைத் தவிர்க்கலாம்!

கவிஞர் இளம்பிறை



வளவன் : மிக நன்றாக உள்ளது.

தேன்மொழி : நீ நேற்று உன் அம்மா கூறிய அறிவுரைப்பற்றிக் கூறினாய் அல்லவா? அதேபோல மாணவர்களுக்குரிய செய்தி, இதழில் வந்துள்ளது. அதையும் படித்துப் பார்.

## பெரியோரைத் துணைக் கொள்



நல்லூர் ஊராட்சி ஒன்றிய தொடக்கப்பள்ளியில் தமிழ்ச்சங்கவிழா நடைபெற்றது. அதற்குத் தமிழறிஞர் மகிழரசன் தலைமை தாங்கினார். அவர் மாணவர்களைப் பார்த்து, பின்வரும் அறிவுரைகளைக் கூறுகிறார். " இன்றைய மாணவர்கள் மிகுந்த அறிவுத்திறன் மிக்கவர்களாக விளங்குகிறார்கள். அவர்கள், தங்களுக்குச் சுதந்திரம் இல்லை என்று வருத்தப்படுகிறார்கள். தங்களுடைய வழிகாட்டிகளான தாய், தந்தை, ஆசிரியர், பெரியோர், முன்னோர் ஆகியோரின் வழிகாட்டுதல்களை வெறுக்கின்றனர். அதனால் அவர்கள் பல்வேறு துன்பங்களைச் சந்திக்கின்றனர்.





மாணவர்கள், "மூத்தோர் சொல் வார்த்தைகளை மீறக் கூடாது" என்ற முதுமொழியை மறந்துவிடுகிறார்கள். எடுத்துக் காட்டாக, தாய்ப்பறவை தன்குஞ்சுகளுக்கு உணவூட்டி வளர்க்கும். வளர்ந்த பின், அவைகளை பறக்கவிடும். அதற்கு முன் அக்குஞ்சுகள் பறக்க முயன்றால், கூடும் சிதையும் சிறகும் முரியும். எனவே, தாய்ப்பறவை பேச்சைக்கேட்டு நடப்பது நலம்.





இதைப்போன்று இன்றைய மாணவர்கள், பெற்றோர் பேச்சைக் கேட்டு அவர்களுக்குக் கீழ்ப்படிந்து நல்வழியில் நடப்பது நன்மை பயக்கும் என்றார்.





## புதிர்களுக்கு விடை கண்டுபிடிப்போம்.

1. பறக்கும் பூச்சியின் பெயரைக் குறிக்கும். ஓர் எழுத்து எது ?





2. ஒற்றைக் காலில் ஆடுவான்.
   ஓய்ந்து போனால் படுப்பான். அவன் யார் ?



3. அறைக்குள் இருந்தே
   ஆயிரம் பணிகள் முடிப்பேன்,
   என்னைச் சுட்டெலி இயக்கும். நான் யார் ?



4. யானைவிரும்பும் சேனைவிரும்பும்
   கடித்தால் இனிக்கும். அது என்ன ?



5. செம்புநிறைய இரத்தினம். அது என்ன ?

படத்தை உற்றுப்பாருங்கள். கீழ்க்காணும் வினாக்களுக்கான விடைகளைக் கண்டுபிடியுங்கள் பார்க்கலாம்!



### வினாக்கள்

1. மேசை எங்கு உள்ளது?
2. வாத்து மறைந்துள்ள இடம் எது?
3. குழல்விளக்கு எங்கு வைக்கப்பட்டுள்ளது?
4. தேநீர்க் கோப்பை எங்கே மறைந்துள்ளது?
5. இங்குள்ள பூச்செடியில் ஒரு வேறுபாடு உள்ளது? அது என்ன?

---

### விடைகள்

1. சன்னலின் கதவாக மேசை சாய்த்து வைக்கப்பட்டுள்ளது.
2. சிறுவனுக்கும் சிறுமிக்கும் இடையில் வாத்து உள்ளது.
3. கதவின் விளிம்பில் குழல் விளக்கு நிறுத்தி வைக்கப்பட்டுள்ள நிலையில் உள்ளது.
4. சிறுவனின், மேல் கையில் தேநீர்க் கோப்பை கவிழ்த்து வைக்கப்பட்டுள்ளது.
5. செம்பருத்திச் செடியில் ரோஜாப்பூ உள்ளது.

## பயிற்சிகள்

### அ) குறுக்கெழுத்துப் புதிர்

**படங்களின் பெயர்களை எழுதி எல்லாக் கட்டங்களையும் நிரப்புங்கள்.**










| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| | | | | | கு | | |
| | | | | | | | |
| | | | கா | | | | |
| | | | | | கு | | |
| சி | | | ம் | | | | |
| | | | | | ஆ | | தை |
| | | கா | | மா | | | |
| தை | | | | | | | |






### செயல்திட்டம்

- செய்தித்தாள்களையும் சிறுவர் இதழ்களையும் சேகரிக்க. அவற்றில் உங்களுக்குப் பிடித்தப்பகுதியை வெட்டியெடுத்து, தொகுப்பேட்டில் ஒட்டி, சிறுவர் இதழ் தயாரிக்கவும். அவரவர் தயாரித்தப் பகுதியை வகுப்பறையில் படித்துக் காட்டுக.
- வீட்டில் உள்ள பெரியவர்களிடம் விடுகதைகள், பழமொழிகளைக் கேட்டு வந்து கூறுங்கள்.

# 16. பள்ளிக்குச் செல்லும் வழியிலே

அறிவழகி, வீட்டிலிருந்து புத்தகப் பையுடன் வெளியே வந்தாள். வயல் வரப்பில் நடந்தாள். கண்ணுக்கு எட்டிய தூரம்வரை பசுமையான நெல் வயல்கள். கிழக்கே, விண்ணைத்தொடும் உயர்ந்த பழுப்புநிற மலை. மேற்கே, பூத்துக்குலுங்கும் மரங்கள். பாறைகளுக்கிடையே கடலை நோக்கி ஆறு ஓடிக் கொண்டிருந்தது.

அறிவழகி, ஆற்றின் நீண்ட பயணம் பற்றி அறிந்திருக்கிறாள். கடலோடு ஆறு கலக்கும் இடத்தில் , கவனமாகப் படகு ஓட்டவேண்டும் என்பதுபற்றியும் அவள் கேள்விப்பட்டிருக்கிறாள். கடலிலிருந்து படகில் கொண்டுவரும் மீன் வகைகள்தாம் எத்தனை ? எத்தனை ? சிறுமீன், திருக்கைமீன், வெண்மீன் என மீன்களின் பெயர்களும் அழகானவையே.



வயல் ஓரங்களில் உயர்ந்த தென்னை மரங்கள் இருந்தன. மலையின் பின்புறம் முழுநிலா எழும்போது, தென்னைமரத்தின் ஓலைகள் நிலவொளியில் மென்மையாகக் காற்றில் சலசலக்கும். அவளது வீட்டுமுற்றம் வழியாக, தினமும் கிளிகள் பறந்து போவது பார்க்க அழகாக இருக்கும். அந்தக் கிளிகளைப் பார்ப்பதற்காகவே அவள் மாலைநேரத்தில் அங்கே காத்திருப்பாள். தொலைவிலிருந்து கிளிகளின் இனிமையான குரல் மெதுவாகக் கேட்கும். அதைத்தொடர்ந்து நிறைய கிளிகள் பறந்து வரும். பிறகு அவை எங்கோ மறைந்துவிடும். ஆனால், சற்று நேரத்தில் இன்னொரு கிளிக்கூட்டம் பறந்து வரும். ஆற்றங்கரையில் உள்ள மரங்களில் கிளிகள் வாழும். இரவுநேரத்தில் ஒரு கிளியைக் கூட வானத்தில் காணமுடியாது. கிளிகள், நாள்தவறாமல் காலையில் பறந்துசெல்லும். மாலையில், நேரம் தவறாமல் திரும்பிவரும். தானும், நேரம் தவறாது பணிகள் செய்யத்தெரிந்துகொள்ள வேண்டும் என நினைத்துக்கொண்டாள்.

அறிவழகி ஆற்றங்கரையில் நடந்தாள். வண்ணப் பூக்கள் பூத்த செம்பருத்தி மரத்தைக் கண்டாள். பவளமல்லிகையும் பூத்துக்குலுங்கியது. வெள்ளைநிற மல்லிகை நன்கு மணம்வீசுவதை உணர்ந்தாள். அவள், இரண்டு மலர்களைக் கொய்து இதழ்களைப் பின்புறமாக மடித்தாள். காதுகளில் அணியும் கம்மல் போல் மலர் அழகாக இருந்தது.

ஒரு பூவின் பொன்னிற மையப் பகுதியில், சிறிய சிலந்திப் பூச்சி இருப்பதைக் கவனித்தாள். பயத்துடன் பூவை உதறினாள். சிலந்தி தரையில் விழுந்தது. அது ஒரு தங்கநிறச் சிலந்தி. முதலில் இது தெரியவே இல்லையே..... என்று நினைத்தாள். அவள் பழுப்புநிறச் சிலந்திகளைப் பார்த்திருக்கிறாள். பெரிய கருஞ்சிலந்திகளைப் பார்த்துப் பயந்திருக்கிறாள். பிறகு அவளுக்குப் பிடித்தமான ஒரு பாறைமீது அமர்ந்தாள். இயற்கையைப் பார்த்து மகிழ்ந்தாள்.

வெள்ளை நிற மலர்கள் மணம் வீசுவது ஏன்? ஆறு ஏன் ஒரு திசை நோக்கியே ஓடுகிறது? எதிர்த் திசையில் ஓடுவது இல்லை? எல்லாமே.. அண்ணனிடம் கேட்க வேண்டும், ஆசிரியரிடம் கேட்க வேண்டும். பாறையிலிருந்து எழுந்து பள்ளியை நோக்கி நடக்கத் தொடங்கினாள் அறிவழகி. காலைத்தென்றல் நெல்வயல்மீது சலசலவென்று வீசிக் கொண்டிருந்தது. அறிவழகியின் மனம் மகிழ்ச்சியில் திளைத்தது.

## பயிற்சிகள்

### அ) வினாக்களுக்கு விடை எழுதுங்கள்.

1. வயல்கள் எவ்வாறு இருந்தன ?
2. கிளிகளின் குரல் எவ்வாறு இருக்கும் ?
3. பவளமல்லிகைமலர் எதைப் போல் தெரிந்தது ?
4. அறிவழகி என்னென்ன சிலந்திகளைப் பார்த்தாள் ?
5. காலைத்தென்றல் எவ்வாறு வீசியது ?

### ஆ) பாடத்தில் வரும் வருணனைத் தொடர்களை எடுத்து எழுதுங்கள்.


எடுத்துக்காட்டு : பசுமையான நெல் வயல்கள்

1. ______________________ 3. ______________________

2. ______________________ 4. ______________________

### இ) படத்தைப் பார்த்து நீங்களும் விவரிக்கலாமே.

யானைகள் எங்கே இருக்கின்றன ? என்ன செய்கின்றன ? எழுதுங்கள்.



______________________________________________

______________________________________________

______________________________________________

______________________________________________

______________________________________________

# 17. கண்டும் கேட்டும் களிப்போம்!



(அமுதாவும் மணியனும் வகுப்பறையில் 'செந்தமிழ் நாடெனும் போதினிலே' பாடலைப் பாடிக் கொண்டிருந்தனர். அப்போது, ஆசிரியர் வகுப்பறைக்குள் வருகிறார் )

மாணவர்கள் : வணக்கம் ஐயா!

ஆசிரியர் : வணக்கம். அமுதா! நான் வகுப்பறைக்குள் வரும்போது நீயும் மணியனும் பாடிக் கொண்டிருந்தீர்களே! என்ன பாடல் அது ?

அமுதா : ஐயா! 'செந்தமிழ் நாடெனும் போதினிலே..' என்னும் பாரதியார் பாடல். நேற்று, தொலைக்காட்சியில் குழந்தைகளுக்கான நிகழ்ச்சியில் கலந்துகொண்ட சிறுவன் இப்பாடலைப் பாடினான்.

ஆசிரியர் : அப்படியா! கமலா, நேற்று நீ தொலைக்காட்சியில் எந்தெந்த நிகழ்ச்சிகளைப் பார்த்தாய் சொல் ?

கமலா : மயிலாட்டம், ஒயிலாட்டம், கரகாட்டம், முதலான கலை நிகழ்ச்சிகளைப் பார்த்தேன். மகிழ்ச்சியாக இருந்தது.

ஆசிரியர் : நன்று. கண்ணா, நீ தொலைக்காட்சியில் எந்த நிகழ்ச்சியை விரும்பிப் பார்ப்பாய் ?

**கண்ணன்** : பறவைகள், விலங்குகள் பற்றிய ‘ஆவணப்படம்’ பார்க்கத்தான் எனக்கு மிகவும் பிடிக்கும்.

**பொன்மணி** : நானும் நேற்று கடல்வாழ் உயிரினங்கள் பற்றிய குறும்படம் பார்த்தேன். அதை என்றைக்குமே என்னால் மறக்க முடியாது.

**ஆசிரியர்** : இவை தவிர, ‘புதியதோர் உலகம் செய்வோம்’ என்னும் நிகழ்ச்சி தொலைக்காட்சியில் ஒளிபரப்பாகிறது. அதில் மாணவர்களின் செயல்வழிக் கற்றல், கலந்துரையாடல், படைப்பாற்றல்கல்வி அனைத்தையும் செய்தித் தொகுப்பாகக் காண்பிக்கின்றனர். நீங்களும் கவனித்துக் குறிப்பெடுத்துக் கொள்ளுங்கள்.

**மாணவர்கள்** : சரி ஐயா!

**ஆசிரியர்** : மிகவும் நல்லது. தொலைக்காட்சியில் எப்போதும் நாம் நல்ல நிகழ்ச்சிகளையே தேர்ந்தெடுத்துப் பார்க்க வேண்டும்.

> தொலைக்காட்சி நிகழ்ச்சிகள் பற்றி ஆசிரியர் வகுப்பறையில் மாணவர்களுடன் கலந்துரையாடுக.

## பயிற்சிகள்

### அ) பிரித்து எழுதுங்கள்.

எடுத்துக்காட்டு : தொலைக்காட்சி = தொலை + காட்சி

1. படைப்பாற்றல் = __________ + __________
2. மயிலாட்டம் = __________ + __________
3. கரகாட்டம் = __________ + __________
4. தேர்ந்தெடுத்து = __________ + __________

### ஆ) ஓரிரு சொற்கள் / சொற்றொடர்களில் விடையளியுங்கள்.

1. கமலா பார்த்த நிகழ்ச்சிகள் யாவை?
2. கண்ணனுக்குப் பிடித்த நிகழ்ச்சி எது?
3. பொன்மணி பார்த்த குறும்படம் எது?
4. நீ விரும்பிப் பார்க்கும் தொலைக்காட்சி நிகழ்ச்சிகள் எவை?


### இ) கொடுக்கப்பட்ட சொற்களைக் கொண்டு சொற்றொடர் அமையுங்கள்.

1. தொலைக்காட்சி 2. கலை நிகழ்ச்சி

# 18. ஊர் செழித்தது



ஓர் அழகிய சிற்றூர். அங்கு, மரங்கள் நிறைந்த சோலை உள்ளது. மாலைநேரம் பறவைகள் ஒலி எழுப்பி, கூடுகளுக்குத் திரும்பிக் கொண்டிருந்தன. சூரியன் மேற்குத் திசையில் மறைந்தது. சூரியனின் வெப்பம் குறைந்தது. ஊரின் அருகில் மலை உள்ளது. அப்பொழுது, கருமேகங்கள் திரண்டு வந்தன. ஊர், இருள்சூழ்ந்து காணப்பட்டது. ஆடுகளும் மாடுகளும் பட்டிகளுக்குத் திரும்பின. தூறல் தொடங்கிய சிறிது நேரத்தில் வானத்தில் இருந்து பெருமழை கொட்டியது. மலையின் மீது பெய்தமழையும் ஆறாக வழிந்தோடியது. தெருக்களில் மழைநீர் வெள்ளமாகப் பெருக்கெடுத்து ஓடியது. சிறுவன், தேங்கியிருந்த மழைநீரில் குதித்தபடி சென்றான். சிறுமிகள், காகிதக் கப்பல்கள் விட்டனர். ஊரின் அருகில் இருந்த வறண்ட ஏரி நிரம்பியது. 'இந்த ஆண்டு பெய்த மழையால் பயிர்கள் நன்கு விளைந்து, நல்ல விளைச்சல் பெருகியது. ஊர் செழித்தது. மக்கள் மகிழ்ச்சி அடைந்தனர்.



( மாலை நேரம் , மேகம் , மழை , வெள்ளம் ஆகிய சொற்களில் ஒன்றைப் பற்றி ஒவ்வொரு மாணவனையும் ஒரு சொற்றொடர் கூறச்செய்க. சொற்றொடர்களை இணைத்து ஆசிரியர் உதவியுடன் கதை உருவாக்குக)

## பயிற்சிகள்

### அ) அகரமுதலியைப் பார்த்துப் பொருள் கூறுங்கள், எழுதுங்கள்.

எடுத்துக்காட்டு : சிற்றூர் = சிறிய ஊர்

1. தூறல் = ________________
2. சோலை = ________________
3. இருள் = ________________

## ஆ) பிரித்து எழுதுங்கள்.

எடுத்துக்காட்டு : வழிந்தோடி = வழிந்து + ஓடி

1. அந்தப்பக்கம் = ________ + ________
2. பெருக்கெடுத்து = ________ + ________
3. கருமேகங்கள் = ________ + ________

## இ) சேர்த்து எழுதுங்கள்.

எடுத்துக்காட்டு : வீதி + எங்கும் = வீதியெங்கும்

1. ஒலித்து + கொண்டே = ________________
2. கொண்டு + இருந்தது = ________________
3. ஆவணம் + படம் = ________________

## ஈ) பொருத்துங்கள்.

1. பறவைகள் – திரண்டன
2. மேகங்கள் – விளைந்தன
3. மழை – ஒலி எழுப்பின
4. பயிர்கள் – ஓடியது
5. வெள்ளம் – பெய்தது

## உ) கொடுத்துள்ள சொற்களைக் கொண்டு விவரித்துக் கூறுங்கள், எழுதுங்கள்.

1. குமுதா – வீடு – பிறந்தநாள் – தோட்டம் – தண்ணீர்.

குமுதா தன் வீட்டில் பிறந்தநாள் விழாவைக் கொண்டாடினாள்.

________________________________________________

________________________________________________

## ஊ) பொருத்தமான சொல்லை எடுத்து எழுதுக.

எடுத்துக்காட்டு : ஊரின் அருகே மலை உள்ளது.

1. சூரியன் மேற்கு திசையில் ________________
2. கருமேகங்கள் திரண்டு ________________
3. சிறுவன், தேங்கியிருந்த மழைநீரில் குதித்தபடி ________________
4. மக்கள் மகிழ்ச்சி ________________

(சென்றான், அடைந்தனர், உள்ளது, மறைந்தது, வந்தன)

## ஏ) கோடிட்ட இடத்தை நிரப்புங்கள்.



எடுத்துக்காட்டு :


கண்ணன் பாடினான்.

கண்ணகி பாடினாள்.

1. பூங்குழலி படித்தாள்.
   எழிலன் ____________________
2. மாணவன் விளையாடினான்
   மாணவர்கள் ____________________
3. மாடு மேய்ந்தது
   மாடுகள் ____________________
4. மரம் வளர்ந்தது
   மரங்கள் ____________________
5. பறவை பறந்தது
   பறவைகள் ____________________
6. அண்ணன் பாடம் படித்தான்
   அக்காள் பாடம் ____________________
7. பூக்கள் பூத்தன
   பூ ____________________
8. கிளிகள் பறந்தன
   கிளி ____________________
9. நாய்கள் குரைத்தன
   நாய் ____________________
10. குழந்தை சிரித்தது
    குழந்தைகள் ____________________
11. முருகன் பாடினான்
    கமலா ____________________
12. குதிரைகள் ஓடின
    குதிரை ____________________


## ஏ) பாதிப்படம் இங்கே ! மீதிப் படத்தை நீங்களே வரையலாமே !






ஐ) உன்னிடம் ஒரு தாளைக் கொடுத்தால், அந்தத்தாளை நீ என்ன செய்வாய் ?














# 19. படம் பார்த்துப் புதிர்களை அறிவோம்



பளபளக்கும் படமெடுக்கும்
ஆனால் பதுங்கி வாழும்?
அது என்ன?



தண்ணீரிலே நீந்தி வரும்
தரையிலே தாவி வரும் ?
அது என்ன?



துள்ளித் திரிவான் தண்ணீரில்,
துடித்துத் துவள்வான் கரையில்
அவன் யார்?



மரம் உண்டு அடுப்பெரிக்க உதவாது
சீப்பு உண்டு, தலைவார முடியாது,
பூ உண்டு, கொண்டையிலே சூட முடியாது
அது என்ன?



அடிமேல் அடிவாங்கி
அனைவருக்கும் ஆனந்தம் தருவான்
அவன் யார்?

## பயிற்சிகள்

1. புதிர்களை, ஆசிரியர் உதவியுடன் நிறைவு செய்யுங்கள்.



என்னை நறுக்கினால்,

____________________ நான் யார் ?



சிவப்பாய் இருப்பேன்

____________________ நான் யார் ?



நான்கு கால்கள் இருக்கும் ஆனால்,

____________________ நான் யார் ?



எட்டாத உயரத்தில்

____________________ அது என்ன ?



பச்சைப்பசேல்

____________________ நான் யார் ?

# 20. விடுதலை வீரர்

நமது தாய்நாடான இந்தியா, 1947ஆம் ஆண்டுக்கு முன்பு ஆங்கிலேயர் ஆட்சியின் கீழ் இருந்தது. ஆங்கிலேயர் ஆட்சியில் இருந்து , இந்தியா விடுதலைப் பெற காந்தியடிகள் முதலான எண்ணற்றத் தலைவர்கள் போராடினார்கள். விடுதலைப் போராட்டத்தில் தங்கள் உயிரையும் நீத்தார்கள். அவர்களில் குறிப்பிடத்தக்கவர் திருப்பூர் குமரன். இவரது இயற்பெயர் குமாரசாமி.

## இளமைப் பருவம்

1904ஆம் ஆண்டு அக்டோபர்த் திங்கள் நான்காம் நாள் திரு. நாச்சிமுத்து, திருமதி. கருப்பாயி ஆகியோருக்கு மகனாகக் குமாரசாமி பிறந்தார். ஈரோடு மாவட்டத்தில் உள்ள சென்னிமலை அவரது ஊராகும். அவரது தந்தை ஒரு நெசவுத் தொழிலாளி. குமாரசாமி ஏழ்மையான குடும்பத்தைச் சேர்ந்தவர். அவர், ஐந்தாம்வகுப்பு வரை நன்றாகப் பயின்றார். குடும்ப வறுமை காரணமாகப் படிப்பைத் தொடரவில்லை. தன் குடும்பத்திற்காகப் பட்டுநெசவு செய்யக் கற்றுக்கொண்டார். பஞ்சுஆலையில் எடைப்பதிவு எழுத்தராகப் பணியாற்றினார். செய்யும் தொழிலே தெய்வமாகக் கொண்டு பணி செய்தார். அப்பணியில் நல்ல பெயர் பெற்றார்.



## விடுதலைப் போராட்டம்

கடவுள் மீதும் திருவள்ளுவர் மீதும் காந்தியடிகள் மீதும் எல்லையில்லாப் பற்றுக்கொண்டு இருந்தார். கத்தியின்றி இரத்தமின்றி அறவழியில் காந்தியடிகள் செய்த போராட்டம் குமாரசாமியை ஈர்த்தது. ஆங்கிலேயரின் அடக்குமுறையைக் கண்டு வெகுண்டு எழுந்தார். தானும் அறவழியில் போராடக் கதராடை உடுத்திக் கொண்டார்.

காந்தியடிகளின் விடுதலைப்போராட்டம் தீவிரம் அடைந்தது. இதனால், ஆங்கிலேயர் கோபம்கொண்டு காந்தியடிகளைக் கைதுசெய்து சிறையில் அடைத்தனர். மக்கள் கொதித்து எழுந்தனர். நாடு முழுவதும் போராட்டம் பரவியது. குமாரசாமி திருப்பூரில் நடந்த போராட்டத்தில் கலந்துகொண்டார்.

எதிர்முனையில் காவல்நிலையத்திலிருந்து காவலர்கள் ஓடிவந்தனர். அனைவரையும் முன்னறிவிப்பின்றி அடித்து நொறுக்கினர். மூவண்ணக் கொடியைக் கீழே போடுமாறு கூறினர். அஞ்சா நெஞ்சன் குமாரசாமி, "என் உயிரே போனாலும், நான் கொடியை மண்ணில் விழ விடமாட்டேன்" என்றார். தன் கைகளை உயர்த்தி "வந்தேமாதரம்" என்று முழங்கினார். காவலர்கள், குமாரசாமியின் தலையில் அடித்தனர்.



குமாரசாமியின் தலையில் பலத்தகாயம் ஏற்பட்டு இரத்தம் கொட்டியது. ஆயினும், அவரது வீரமுழக்கம் குறையவே இல்லை. அடிபட்டு மண்ணில் வீழ்ந்தும் கூட, கொடியை மண்ணில் விழாமல் காத்தார். கொடிக்காகத் தன் உயிரையும் நீத்தார். அன்றுமுதல் அன்னாரை கொடி காத்த குமரன் என்று சிறப்பாக அழைக்கிறோம். நாமும் நாட்டுப்பற்று மிக்கவராகத் திகழ்வோம்! நாட்டின் முன்னேற்றத்திற்குப் பாடுபடுவோம்!

## பயிற்சிகள்

### அ) பிரித்து எழுதுங்கள்.

எடுத்துக்காட்டு : அறவழி = அறம் + வழி

1. இரத்தமின்றி = ________ + ________
2. கதராடை = ________ + ________
3. தொண்டர் படை = ________ + ________

### ஆ) சேர்த்து எழுதுங்கள்.

எடுத்துக்காட்டு : நெசவு + தொழில் = நெசவுத்தொழில்

1. நாடு + பற்று = ________________
2. விடுதலை + போராட்டம் = ________________
3. எடை + பதிவு = ________________

### இ) எதிர்ச்சொல் எழுதுக.

எடுத்துக்காட்டு : மண்ணில் X விண்ணில்

1. கீழே X
2. உள்ளே X
3. உயர்த்தி X

### ஈ) ஓரிரு சொற்களில் விடையளியுங்கள்.

1. திருப்பூர் குமரனின் பெற்றோர் யாவர் ?
2. குமாரசாமி எங்கு பிறந்தார் ?
3. குமரன் யார் மீது அன்பு கொண்டிருந்தார் ?
4. குமரன் ஏன் வெகுண்டு எழுந்தார் ?
5. குமரன் கொடியை எவ்வாறு பாதுகாத்தார் ?

### உ) படித்து அறிக.

வீரபாண்டிய கட்டபொம்மன், சுப்பிரமணிய சிவா, கப்பலோட்டியத் தமிழர் வ.உ. சிதம்பரனார், செண்பகராமன், வாஞ்சிநாதன், மகாகவி சி. சுப்பிரமணிய பாரதியார் போன்றவர்களின் வாழ்க்கை வரலாற்று நூல்களை, படித்து அறிந்து கொள்க.

# 21. மரபுச் சொற்களை அறிவோம்



வண்ணக் கிளியே வீடெங்கே!
மரத்துப் பொந்தே என்வீடு.
தூக்கணாங் குருவி வீடெங்கே!
தொங்குது மரத்தில் என்வீடு.
கறுப்புக் காகமே வீடெங்கே!
கட்டுவேன் மரத்தில் என்வீடு.
கடுகடு சிங்கமே வீடெங்கே!
காட்டுக் குகையே என்வீடு.
நகரும் நத்தையே வீடெங்கே!
நகருதே என்னுடன் என்வீடு.





என்னும் பாடலைப் பொன்னரசியும் கயல்விழியும் பாடிக்கொண்டே தாத்தாவிடம் வந்தார்கள்.தாத்தா நன்றாகப் பாடினீர்கள் என்று கைத்தட்டிப் பாராட்டினார்.

தாத்தா : கயல்விழி, சிங்கம் காட்டில் எங்கு வாழ்கிறது ?

கயல்விழி : தாத்தா, சிங்கம் காட்டின் குகையில் வாழ்கிறது.

தாத்தா : மிகச் சரியாகச் சொன்னாய். பாராட்டுகள். குதிரை, மாடு ஆகியவற்றை எங்கு வளர்க்கிறோம் ?

பொன்னரசி : குதிரை, மாடு ஆகியவற்றைக் கொட்டகையில் வளர்க்கிறோம்.

தாத்தா : பொன்னரசி, குதிரையை வளர்க்கும் இடத்தைக் 'கொட்டில்' என்றும், மாட்டை வளர்க்கும் இடத்தைத் 'தொழுவம்' என்றும் கூற வேண்டும்.

கயல்விழி : தாத்தா, ஏன் அப்படிக் கூற வேண்டும் ?

தாத்தா : சரியான கேள்வி. நம் முன்னோர்கள் தொன்றுதொட்டுச் சில சூழ்நிலைகளில் எப்பொருளை, எச்சொல்லால் சொன்னார்களோ, அப்படியே சொல்வது மரபாகும். இதுபோல் எலி வாழும் இடம் வளை, ஆடுகள் வாழும் இடம் பட்டி, பறவை வாழும் இடம் கூடு, முயல் வாழும் இடம் புதர் என்றும் கூறவேண்டும். அதே போல் பனை ஓலை, தென்னங்கீற்று, வாழை இலை, அகத்திக்கீரை, கோவைத் தழை என்றும் கூறுதல் மரபு.

## பயிற்சிகள்

அ) இப்பாடத்தில் வந்துள்ள மரபுச் சொற்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன. அவற்றினை சொல்லிக் கொண்டே எழுதுக.

1. மரப் பொந்து ______________________
2. குருவிக் கூடு ______________________
3. மாட்டுத் தொழுவம் ______________________
4. குதிரைக் கொட்டில் ______________________
5. எலி வளை ______________________
6. ஆட்டுப் பட்டி ______________________
7. பறவைக் கூடு ______________________
8. முயல் புதர் ______________________
9. பனை ஓலை ______________________
10. தென்னங்கீற்று ______________________
11. வாழை இலை ______________________
12. அகத்திக் கீரை ______________________
13. கோவைத் தழை ______________________

ஆ) அடைப்புக்குள்ளிருந்து ஏற்ற மரபுச் சொல்லை எடுத்து எழுதுக.

எடுத்துக்காட்டு :

பாவை, பாய் பின்னினாள் ( தைத்தாள், பின்னினாள், செய்தாள் )

1. கோவிந்தன் கூடை __________ ( கட்டினான், போட்டான், முடைந்தான் )
2. குமரன், கூரை __________ ( வேய்ந்தான், வைத்தான், போட்டான் )
3. செல்வி, ஓவியம் __________ ( தீட்டினாள், வரைந்தாள், புனைந்தாள் )

இ) கோடிட்ட இடத்திற்கு, உரிய மரபுச் சொல்லை அடைப்புக்குள்ளிருந்து எடுத்து எழுதுக.

(விழுங்கினேன், பருகினேன், குடித்தேன், தின்றேன், உண்டேன்)

1. நான் உணவை ____________
2. நான் பாலைப் ____________
3. முறுக்கைத் ____________
4. மாத்திரையை ____________
5. தண்ணீரைக் ____________

ஈ) கோடிட்ட இடத்திற்கு உரிய மரபுச் சொல்லை எடுத்து எழுதுக.

1. தென்றல் ____________
2. மலர்கள் ____________
3. மலர்கள் தேனைச் ____________
4. நிலவு ____________
5. பொழுது ____________

(மலர்ந்தன, வீசியது, புலர்ந்தது, சொரிந்தன, ஒளிவீசியது)

## தெரிந்து கொள்

விலங்குகளின் இளமைப் பெயர்கள் : அணிற்பிள்ளை, ஆட்டுக்குட்டி, கழுதைக்குட்டி, குதிரைக்குட்டி, நாய்க்குட்டி, பன்றிக்குட்டி, எருமைக்கன்று, பசுங்கன்று, கீரிப்பிள்ளை, சிங்கக்குருளை, எலிக்குஞ்சு.

விலங்குகள், பறவைகள் தங்குமிடம் : குதிரைக்கொட்டில், மாட்டுத்தொழுவம், வாத்துப்பண்ணை, கோழிப்பண்ணை, யானைக்கூடம்.

விலங்குகள், பறவைகள் ஒலி : அணில் கீச்சிடும், ஆந்தை அலறும், கழுதை கத்தும், குதிரை கனைக்கும், சிங்கம் முழங்கும், புலி உறுமும், நரி ஊளையிடும், யானை பிளிறும், குயில் கூவும், காகம் கரையும்.

காய்களின் இளமைப் பெயர்கள் : அவரைப்பிஞ்சு, முருங்கைப்பிஞ்சு, கத்தரிப்பிஞ்சு, வெள்ளரிப்பிஞ்சு, மாவடு.

# 22. செம்மொழித்தமிழின் சிறப்புகள்

நம் தாய்மொழி, அமிழ்தினும் இனிய தமிழ்மொழி ஆகும். இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே தமிழ் மிகச்சிறந்த பேச்சுமொழியாகவும் எழுத்து மொழியாகவும் இருந்துள்ளது. உலகில் ஏறத்தாழ ஆறாயிரம் மொழிகள் உள்ளன. அவற்றுள் மூவாயிரம் மொழிகள் பேச்சு மொழியாக மட்டுமே உள்ளன. கிரேக்கம், இலத்தீன், சீனம், அரேபியம், ஹீப்ரு, வடமொழி ஆகியவை உலகிலேயே மிகப்பழமையான மொழிகளாகும். தமிழ்மொழி, கிரேக்க இலத்தீன் மொழிகளுக்கு இணையாகத் திகழ்கிறது. கிரேக்க, இலத்தீன் மொழிகள் தற்போது புதிய வடிவத்தில் மாறிவிட்டன. ஆனால், தமிழ் அன்றுமுதல் இன்றுவரை உயிர்ப்புள்ள தொன்மையான மொழியாக விளங்குகிறது.



இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முற்பட்ட உலோக, சுடுமண் சிற்பங்கள்.

இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு மேலாகத் தமிழ்மொழி பேச்சு மொழியாகவும் எழுத்து மொழியாகவும் இருந்துள்ளமையால் 'செம்மொழி' என்னும் தகுதியைப் பெற்றுள்ளது.

இந்தியாவில் பலமொழிகள் பேசப்படுகின்றன. அவற்றுள் தமிழும் வடமொழியும் மட்டுமே செவ்வியல் மொழிகளாகத் தகுதி பெற்றுள்ளன. இந்திய அரசு 12.10.2004 இல் அதிகாரப்பூர்வமாக தமிழையும் அதன்பின் வடமொழியையும் செவ்வியல் மொழிகளாக அறிவித்துள்ளது. அதற்குக் காரணம் அவற்றின் தொன்மையே ஆகும்.





தமிழரின் வீர விளையாட்டுகளைச் சித்திரிக்கும் பாறை ஓவியங்கள்.

இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்னரே தமிழ்மொழிக்கென இலக்கண நூல் ஒன்று நமக்குக் கிடைத்துள்ளது. தொல்காப்பியம் என்னும் பெயருடைய அந்நூலை மிக உயர்ந்த இலக்கண நூலாக அறிஞர்கள் கருதுகின்றனர். அந்நூல் தொல்காப்பியரால் எழுதப்பெற்றது. சங்ககாலத் தமிழ்ப் புலவர்களான ஔவையார், கபிலர், கணியன் பூங்குன்றனார், நக்கீரனார் போன்றோர் மிக உயர்ந்த சிந்தனைகளைப் பாடல்களாக்கிக் கொடுத்துள்ளனர். உலகமே இன்று தமிழின் அருமை பெருமையை வியந்து போற்றுகிறது. உலகப் பொதுமைக் கருத்துகள் தமிழில் உள்ளன.

'யாதும் ஊரே யாவரும் கேளிர்' என்பது கணியன் பூங்குன்றனாரின் வாக்கு.
'பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும்', என்றார் திருவள்ளுவர்.
'ஒன்றே குலம் ஒருவனே தேவன்', என்பது திருமூலரின் கருத்து.
'வாடிய பயிரைக் கண்ட போதெல்லாம் வாடினேன்', என்று வாடிய பயிருக்கும் உள்ளம் உருகியவர் வள்ளலார்.

உயர்வுதாழ்வற்ற இயற்கை வழிபாட்டுடன் மனிதநேயமிக்கப் படைப்புகளை உலகில் முந்தித் தந்தவர்கள் தமிழறிஞர்களே. தமிழின் பழைமைமிகு நூல்களான சங்க இலக்கியங்கள் சமயச் சார்பற்றவை. அவை, தனிமனித வாழ்வை நெறிப்படுத்தும் உயரிய கருத்துகளைக் கொண்டவை. தமிழின் மிகச்சிறந்த அறநூலான திருக்குறள், 'உலகப்பொதுமறை' எனப் போற்றப்படுகிறது. இலக்கியங்கள், மக்களின் வாழ்க்கையைப் பதிவு செய்துள்ளன. தமிழ் இலக்கியங்களில் கூறப்படும் தமிழர்களின் வாழ்வியல்புகளை இன்றளவும் தமிழர்கள் கடைப்பிடித்து வாழ்கின்றனர்.




செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனம் 2008 மே 19ஆம் நாள் முதல், சென்னையில் இயங்கி வருகிறது.

"தேமதுரத் தமிழோசை உலகமெலாம்
பரவும் வகை செய்தல் வேண்டும்"

– பாரதியார்

## பயிற்சிகள்

### அ) சேர்த்து எழுதுங்கள்.

எடுத்துக்காட்டு : செம்மை + மொழி = செம்மொழி

1. தாய் + மொழி = ____________
2. தமிழ் + அறிஞர் = ____________
3. இரண்டு + ஆயிரம் = ____________

### ஆ) பிரித்து எழுதுங்கள்.

எடுத்துக்காட்டு : பழமையான = பழமை + ஆன

1. ஆறாயிரம் = ____________
2. செம்மொழி = ____________
3. தொல்காப்பியம் = ____________

### இ) வினாக்களுக்கு விடையளியுங்கள்.

1. உலகின் மிகப் பழமையான மொழிகள் யாவை ?
2. தமிழ் செம்மொழித் தகுதியைப் பெற்றுள்ளது. எவ்வாறு ?
3. சங்கப் புலவர்களின் பெயர்களை எழுதுக.
4. 'உலகப் பொதுமறை' என வழங்கப்பெறும் நூல் எது ?
5. 'ஒன்றே குலம் ஒருவனே தேவன்' என்பது யாருடைய கருத்து ?
6. தமிழில் மிகப் பழமையான இலக்கண நூல் எது ?

### ஈ) கொடுக்கப்பட்ட சொற்களைக் கொண்டு சொற்றொடர் அமையுங்கள்.

1. அருமை பெருமை
2. உயர்வு தாழ்வற்ற

# 23. சின்னஞ்சிறுவன்

சின்னஞ்சிறுவன் பள்ளியில் சேர்க்கப்பட்டான்.
அவனோ, மிகவும் சிறிய பையன்.
அப்பள்ளி மிகவும் பெரிய பள்ளி.
பள்ளியின் நுழைவுவாயிலை ஒட்டி அவன் வகுப்பறை.
அந்த நுழைவுவாயிலின் கதவு திறந்தால் அவன் வகுப்பு.
எனவே, அவனுக்கு மகிழ்ச்சி.
அதனால், அப்பள்ளி பெரியது என அவனுக்குத் தோன்றவில்லை.

ஒருநாள் காலை.
வகுப்பு நேரத்தில் ஆசிரியர் சொன்னார் :
'இன்று நாம் ஒரு படம் வரையப் போகிறோம்.'
'நல்லது' என நினைத்தான் சின்னஞ்சிறுவன்.
அவனுக்குப் படம் வரைவது என்றால் மிகவும் பிடிக்கும்.
எல்லாவகையான படங்களும் அவனால் வரைய இயலும்.
சிங்கம், புலி,
கோழிக்குஞ்சு, பசுமாடு,
தொடர்வண்டி, படகு,
போன்ற எல்லாமும்.
வண்ணக்கட்டிகளை எடுத்து வரையத் தொடங்கினான்.



ஆனால் ஆசிரியர் சொன்னார்:
'பொறுங்கள்! இப்போது தொடங்க வேண்டாம்.'
அனைவரும் தன்னைக் கவனிக்கத் தயாராகும் வரை ஆசிரியர் காத்திருந்தார்.

ஆசிரியர் சொன்னார்:
'இப்போது....
பூக்களின் படத்தை நாம் வரையப் போகிறோம்.'
'நல்லது' என நினைத்தான் சின்னஞ்சிறுவன்.
அவனுக்குப் பூக்கள் படம் வரைவது என்றால் மிகவும் பிடிக்கும்.
இளஞ்சிவப்பு, ஆரஞ்சு, நீல வண்ணக் கட்டிகளை எடுத்து ஒரு தாளில் பூக்களை வரையத் தொடங்கினான்.

ஆனால், ஆசிரியரோ....
'இப்போது நான் பூக்களை எவ்வாறு வரைவது என்று காட்டப் போகிறேன்' என்று கூறி, கரும்பலகையில் ஒரு பூவை வரையத் தொடங்கினார்.
பச்சைக்காம்புடன் கூடிய சிவப்புப் பூவை ஆசிரியர் வரைந்தார்.
'இப்போது, நீங்களும் இதேபோல் வரையத் தொடங்கலாம்' என்றார் ஆசிரியர்.
சின்னஞ்சிறுவன், ஆசிரியர் வரைந்த பூவைப் பார்த்தான்.
பிறகு, தான் வரைந்த பூக்களையும் பார்த்தான்.
ஆசிரியர் வரைந்த பூவை விடவும், அவன் வரைந்த 'பூக்கள்' தான், அவனுக்குப் பிடித்திருந்தது.

ஆனால், அவன் எதுவும் கூறவில்லை.
அவன் பூக்களை வரைந்த தாளைத் திருப்பி, ஆசிரியர் வரைந்தது போலவே பூவைச் சிவப்பு நிறத்திலும் காம்பினைப் பச்சை நிறத்திலும் வரைந்தான்.

மற்றொரு நாள்....
சின்னஞ்சிறுவன் தன் வகுப்பறைக்கு உள்ளே வந்தான்.
அப்போது, ஆசிரியர் சொன்னார்:
'இப்போது....
நாம் களிமண்ணால் சில பொருள்களைச் செய்யப் போகிறோம்' என்றார்.
'நல்லது' என்று நினைத்தான் சின்னஞ்சிறுவன்.

அவனுக்குக் களிமண் மிகவும் பிடிக்கும்.

களிமண் கொண்டு அவனால் பல விதமானப் பொருள்களை உருவாக்க இயலும்.
பாம்புகள், மனிதர்கள்,
யானைகள், எலிகள்,
மகிழ்வுந்து, சரக்குந்து
போன்ற எல்லாமும்.
அவன், அவனுக்கு அளிக்கப்பட்டிருந்த களிமண் உருண்டையினை எடுத்து, பொருள்கள் செய்யத் தொடங்கினான்,
ஆனால், ஆசிரியர் 'பொறுங்கள் இப்போது தொடங்க வேண்டாம்' என்றார்.
அனைவரும் தன்னைக் கவனிக்கத் தயாராகும் வரை ஆசிரியர் காத்திருந்தார்.

ஆசிரியர் சொன்னார் :
'இப்போது....
நாம் களிமண்ணால் ஒரு சொப்பு உருவாக்கப் போகிறோம்' என்றார்.
'நல்லது' என நினைத்தான் சின்னஞ்சிறுவன்.
அவனால் களி மண்ணால் விதவிதமான சொப்புகள் உருவாக்க இயலும்.
வெவ்வேறு அளவுகளில் களிமண்ணால் பலவிதமான சொப்புகள் செய்யத் தொடங்கினான்.

ஆனால், ஆசிரியர்
'பொறுங்கள்! நான் உங்களுக்குச் சொப்பு எவ்வாறு செய்வது என்று செய்து காட்டப் போகிறேன்' என்று கூறி,
பெரிய கிண்ணம் ஒன்றைக் களிமண்ணால் செய்து காண்பித்தார்.
'இப்போது நீங்களும் இதேபோல் செய்யுங்கள்' என்றார் ஆசிரியர்.
ஆசிரியர் செய்துகாண்பித்த சொப்பை விடவும் அவனுக்கு, அவன் செய்த சொப்புகள் மிகவும் பிடித்திருந்தன.

ஆனால், அவன் ஏதும் கூறவில்லை.
அவன் மொத்த களிமண்ணையும் ஒன்றாகத்திரட்டி ஒரு பெரிய பந்துபோல் உருண்டையாக ஆக்கினான். அதனைக்கொண்டு ஆசிரியர் செய்தது போல் களிமண்ணால் பெரிய கிண்ணம் ஒன்றைச் செய்தான்.

குறுகிய கால அவனது அனுபவத்திலிருந்தே சின்னஞ்சிறுவன் பொறுமையாகக் காத்திருக்கவும்,
ஆசிரியர் செய்வதைக் கவனிக்கவும்,
பின், அவர் செய்வது போலவே செய்யவும்
பழகிக் கொண்டான்.

இவ்வாறு இருக்கையில்,
சின்னஞ்சிறுவனின் குடும்பம்
வேறுநகரில் உள்ள வேறொரு வீட்டிற்குக் குடிபெயர்ந்தது.
சின்னஞ்சிறுவன் இப்போது வேறு பள்ளிக்குச் சென்றான்.
அவன் புதியதாகச் சேர்ந்த பள்ளி இன்னும் பெரியது.
பள்ளியின் நுழைவுவாயிலை ஒட்டி அவனது வகுப்பறை இல்லை.
நுழைவுவாயில் கதவுகள் திறந்ததும் அவனது வகுப்பறை இல்லை.
வகுப்பறைக்குச் செல்ல பெரிய படிகள் சிலவற்றில் ஏற வேண்டும்.
பெரியகூடத்தைக் கடக்க வேண்டும்.

அவன், புதிய பள்ளியில் சேர்ந்த
முதல்நாளே, ஆசிரியர் கூறினார்.
'இன்று நாம் படங்கள் வரையப் போகிறோம்'.
'நல்லது' என நினைத்தான் சின்னஞ்சிறுவன்.
ஆசிரியர் எவ்வாறு செய்ய வேண்டும் என்று கூறுவார் என
அவன் காத்திருந்தான்.
ஆனால், அவர் எதுவும் கூறவில்லை.
அவர் வகுப்பறையைச் சுற்றி வந்தார்.
அவனருகே வந்த அவர்,
'படங்கள் வரைய உனக்கு விருப்பம் தானே?' எனக் கேட்டார்.
'ஆமாம்! எனக்கு விருப்பம்' என்றான் சின்னஞ்சிறுவன்.
'என்ன வரையப் போகிறாய்?' என்றார் ஆசிரியர்.
'எவ்வாறு வரைவது எனக் கூறுங்கள்?'
என்று கேட்டான் சின்னஞ்சிறுவன்.

'ஏன் அவ்வாறு கேட்கிறாய் ? உன் விருப்பம்போல்
எது வேண்டுமானாலும் வரை' என்றார் ஆசிரியர்.
'எந்த வண்ணத்திலும் வரையலாமா ?' என்றான் சின்னஞ்சிறுவன்.
'எந்த வண்ணத்திலும் வரையலாமே' என்ற ஆசிரியர், மேலும்
'எல்லாரும் ஒரேபடத்தை ஒரே வண்ணத்தில் வரைந்தால் யார் யார், எந்தெந்தப் படங்களை எப்படியெல்லாம் வரைந்துள்ளார்கள் என்று எனக்கு எப்படித் தெரியும் ?' என்று கூறினார்.

'நீங்கள் சொல்வது, எனக்குப் புரியவில்லை' என்று கூறிய சின்னஞ்சிறுவன் இளஞ்சிவப்பு, ஆரஞ்சு, நீல நிறப் பூக்களை அவன் விருப்பம் போல் வரைந்தான்.

பள்ளியின் நுழைவுவாயிலின் கதவு திறந்ததும்,
அவனது வகுப்பறை இல்லாவிட்டாலும்கூட
சின்னஞ் சிறுவனுக்கு அவனது பள்ளி,
மிகவும் பிடித்திருந்தது.

– ஹெலன் ஈ பக்லே.

எங்கள் பள்ளியும், சின்னஞ் சிறுவனின் புதிய பள்ளி போலத்தான்.
எங்கள் பள்ளி எங்களுக்கும் மிகவும் பிடிக்கும்.

## செயல் திட்டம்

1. நீ விரும்பும் படங்களை வரைந்து, வண்ணம் தீட்டி ஒரு படத்தொகுப்பு தயாரிக்கவும் .
2. களிமண்கொண்டு நீ விரும்பும் பொருட்களை உருவாக்கி மகிழவும்; வகுப்பறையில் காட்சிப்படுத்தவும் .

# 24. பட விளக்க அகர முதலி

படஅகரமுதலியில் அகரவரிசையில் சொற்கள் அமைந்திருக்கும்; ஒவ்வொரு சொல்லுக்கும் படத்துடன் விளக்கமும் இருக்கும்.

உயிர்மெய் எழுத்துகள் அடங்கிய படத்துடன் கூடிய சொற்களை வரிசைப்படுத்தி அறிவோம்.

| | | |
|---|---|---|
| ச |  | சட்டை : பருத்தி மற்றும் செயற்கை இழைகளைக் கொண்டு உருவாக்கப்படும் ஆடையாகும். பெரியவர் முதல் சிறியவர் வரை சட்டையை அணிகின்றனர். அவரவர் தேவைக்கேற்ப பல்வேறு வடிவங்களில் சட்டை அணிகின்றனர். |
| சா |  | சாமந்திப்பூ : செடியில் கொத்துக்கொத்தாய் பூக்கும். இதில் வெள்ளை, மஞ்சள், இளஞ்சிவப்புநிற வகைகள் உண்டு. இது மாலை கட்டவும் பூசைக்கும் தலையில் சூடவும் பயன்படுகிறது. |
| சி |  | சிகரம் : மிக உயர்ந்த மலைப்பகுதி. இமயமலையிலுள்ள மிக உயர்ந்த சிகரம் எவரெஸ்ட் ஆகும். சிகரத்தினைப் பனி மூடி இருக்கும். |
| சீ |  | சீத்தாப்பழம் : திரள்கனிவகையைச் சார்ந்தது. இது காடு மற்றும் மலைப்பகுதிகளில் விளைகிறது. இதில் உயிர்ச்சத்து கூடுதலாக உள்ளது. |
| சு |  | சுத்தியல் : ஒரு கருவி. சுவர் மற்றும் மரக்கட்டைகளில் ஆணி அடிக்கப் பயன்படுகிறது. மரத்தச்சர், இரும்புத்தச்சர், கட்டடத் தொழிலாளர்கள் தங்கள் தொழிலுக்காகப் பயன்படுத்துகின்றனர். |

| | | |
|---|---|---|
| சூ |  | சூரியகாந்தி : தோட்டப் பயிர். இதன் விதையிலிருந்து சமையல் எண்ணெய் தயாரிக்கப்படுகிறது. இந்த எண்ணெய் மருத்துவக் குணமுடையது. |
| செ |  | செங்கல் : கனச்செவ்வக வடிவம் உடையது. களிமண்ணில் இவ்வடிவத்தை உருவாக்கி சூளையில் இட்டுச் சுட்டபிறகு செங்கல் தயாராகிறது. கட்டடங்கள் உருவாக்க செங்கல் பயன்படுகிறது. |
| சே |  | சேய் : குழந்தையை, சேய் என்று அழைப்பர். குழந்தையின் மழலைச் சொற்களை அனைவரும் விரும்புவர். குழந்தைகளை கவனமுடன் வளர்க்க வேண்டும். |
| சொ |  | சொக்கட்டான் : தாயக்கட்டையை உருட்டும் போது விழும் புள்ளிகளுக்கேற்ப சோழி, கல் போன்ற காய்களைக் கட்டங்களில் நகர்த்தி விளையாடுவர். எண்களை எண்ணும் பயிற்சிக்கு இவ்விளையாட்டு பயன்படுகிறது. |
| சோ |  | சோளக்கதிர் : தானிய வகைகளில் ஒன்று. இது பரவலாகப் பயிரிடப்படுகிறது. இதில் கூழ், அடை, உப்புமாவு போன்ற உணவு வகைகள் தயாரிக்கப்படுகின்றன. |

## பயிற்சிகள்

அ) கீழ்க்காண் சொற்களை அகர வரிசைப் படுத்துங்கள்.

ஊசி, ஆண்டு, அக்காள், உடும்பு
இரவு, எந்திரம், ஒட்டகம், ஏரி
ஐந்து, ஓடை, ஔடதம், ஈரம்

ஆ) கட்டத்தில் உள்ள எழுத்துகளைப் பயன்படுத்திச் சொற்களை உருவாக்கி அகர வரிசைப்படி எழுதுங்கள்.

| | | | |
|---|---|---|---|
| அ | ல் | இ | லை |
| ணி | ஆ | டு | ஈ |

எடுத்துக்காட்டு : அணில்

1. ____________ 7. ____________
2. ____________ 8. ____________
3. ____________ 9. ____________
4. ____________ 10. ____________
5. ____________ 11. ____________
6. ____________ 12. ____________

இ) பின்வரும் படங்களை வரைந்து பழகுவோம்.

நிலவு சூரியன் மரம் மேகம்
மீன் காகம் பந்து மாம்பழம்

ஈ) கீழ்க்காண் சொற்களை முதல்எழுத்துகளின் அடிப்படையில் அகரவரிசைப்படுத்துவோம்.

காக்கை, கட்டில், குங்குமம், கீரை,
கிழங்கு, கூண்டு, கொடி, கேளிர்,
கைப்பிடி, கெண்டைமீன், கோவில், கௌதாரி.

உ) பொருத்தமான எழுத்துகளால் கோடிட்ட இடங்களை நிரப்பி அகர வரிசைப்படுத்தி எழுதுங்கள். (ச, சா, சி, சீ, சு, சூ, செ, சே, சொ, சோ, )

1. ____ க்கரம். 2. ____ ங்கம் ____________ ____________
3. ____ ண்டெலி 4. ____ ட்டை ____________ ____________
5. ____ ப்பு 6. ____ ரியன் ____________ ____________
7. ____ வல் 8. ____ ய்தி ____________ ____________
9. ____ த்து 10. ____ று ____________ ____________

ஊ) இரண்டாவது எழுத்துகளின் அடிப்படையில் அகர வரிசைப்படுத்துக.

எடுத்துக்காட்டு:

| | | | | |
|---|---|---|---|---|
| மகள் | மடல் | மணம் | மதகு | மயக்கம் |
| மரம் | மலர் | மழலை | மறம் | மனம் |

எ) இரண்டாவது எழுத்துகளின் அடிப்படையில் அகர வரிசைப்படுத்துக.

தகடு தவளை தழல்

தனயன் தமக்கை தரணி

ஏ) படத்தைப் பார்! பாடல் எழுதுக.



# 25. செய்யுள் பகுதி

## 1. புதிய ஆத்தி சூடி

**அச்சம் தவிர்.**

பொருள்: உன்னிடமுள்ள பயத்தை நீக்கிவிடு.

அருஞ்சொற் பொருள்: அச்சம் – பயம்; தவிர் – நீக்குக

**ஆண்மை தவறேல்.**

பொருள்: வீரத்தைக் கைவிடக்கூடாது.

அருஞ்சொற் பொருள்: ஆண்மை – வீரம்; தவறேல் – கைவிடக்கூடாது

**இளைத்தல் இகழ்ச்சி.**

பொருள்: மனம் தளர்ச்சியடைதல் தாழ்வைத் தரும்.

அருஞ்சொற் பொருள்: இளைத்தல் – மனத்தளர்ச்சி; இகழ்ச்சி – தாழ்வு

**ஈகை திறன்.**

பொருள்: வறியவருக்குக் கொடுப்பதே உயர்ந்த குணமாகும்.

அருஞ்சொற் பொருள்: ஈகை – வறியவருக்குக் கொடுப்பது; திறன் – குணம்

**உடலினை உறுதிசெய்.**

பொருள்: உடலை வலிமையாக்குக.

அருஞ்சொற் பொருள்: உறுதி – வலிமை

**ஊண் மிகவிரும்பு.**

பொருள்: உணவை மிகவும் விருப்பத்துடன் உண்க.

அருஞ்சொற் பொருள்: ஊண் – உணவு; மிக விரும்பு – மிகவும் விரும்புக.

**எண்ணுவது உயர்வு.**

பொருள்: உயர்வைத் தருகின்ற எண்ணங்களையே நினைப்பாயாக.

அருஞ்சொற் பொருள்: எண்ணுவது – நினைப்பது

**ஏறுபோல் நட.**

பொருள்: ஆண் சிங்கத்தைப் போல நிமிர்ந்து நடக்க வேண்டும்

அருஞ்சொற் பொருள்: ஏறு – ஆண்சிங்கம்; நட – நிமிர்ந்து நடக்க வேண்டும்.

**ஐம்பொறி ஆட்சி கொள்.**

**பொருள் :** மெய், வாய், கண், காது, மூக்கு ஆகிய ஐந்து உறுப்புகளையும் கட்டுப்படுத்துக.

**அருஞ்சொற் பொருள் :** ஐம்பொறி – மெய், வாய், கண், காது, மூக்கு ஆகிய ஐந்து உறுப்புகள், ஆட்சி கொள் – கட்டுப்படுத்து

**ஒற்றுமை வலிமையாம்.**

**பொருள்:** ஒற்றுமையாக வாழ்வதே வலிமையை உண்டாக்கும்.

**அருஞ்சொற் பொருள்:** ஒற்றுமை – ஒன்றுபட்டிருப்பது.

**ஓய்தல் ஒழி.**

**பொருள்:** சோம்பலை நீக்கி விடுக.

**அருஞ்சொற் பொருள்:** ஓய்தல் – சோம்பல், தளர்ச்சி; ஒழி – நீக்கிவிடு

**ஔடதம் குறை.**

**பொருள்:** மருந்து உண்பதைக் குறைத்துக் கொள்.

**அருஞ்சொற் பொருள்:** ஔடதம் – மருந்து

– மகாகவி சி. சுப்பிரமணிய பாரதியார்

## பயிற்சிகள்

**பொருள் எழுதுக :**

1. அச்சம் தவிர் : ____________________
2. ஆண்மை தவறேல். : ____________________
3. இளைத்தல் இகழ்ச்சி : ____________________
4. ஈகை திறன் : ____________________
5. உடலினை உறுதிசெய் : ____________________
6. ஊண் மிக விரும்பு : ____________________
7. எண்ணுவது உயர்வு : ____________________
8. ஏறு போல் நட : ____________________
9. ஐம்பொறி ஆட்சி கொள் : ____________________
10. ஒற்றுமை வலிமையாம் : ____________________
11. ஓய்தல் ஒழி : ____________________
12. ஔடதம் குறை : ____________________

## 2. திருக்குறள் கதைகள்

### 1. அன்புடைமை

குமணன், ஏழாம் வகுப்பு மாணவன். அவன் பள்ளிக்குச் செல்லும் வழியில் முறுக்கு விற்கும் தாத்தா ஒருவர் வாழ்ந்து வந்தார். அவர் வறுமையினால், காலை உணவு உண்பதில்லை என்பதைக் குமணன் அறிந்தான். அம்மா அளிக்கும் மதிய உணவைத் தாத்தாவுக்குத் தந்துவிட்டு, பள்ளியின் சத்துணவை அவன் சாப்பிட்டு வந்தான்.



அன்று, பள்ளிக்கு விடுமுறை. அவன் அம்மாவிடம் தாத்தாவின் நிலையைக் கூறித் தாத்தாவிற்குக் காலைஉணவைத் தரும்படி வேண்டினான். அம்மா, தாத்தாவுக்குக் காலை உணவை அவனிடம் கொடுத்தனுப்பினாள். அவன் விரும்பியபடியே தாத்தாவைத் தங்கள் வீட்டிற்கு அழைத்து வரும்படிக் கூறினாள்.

குமணன், தாத்தாவிடம் உணவைக் கொடுத்தான். தன் வீட்டிற்கு அழைத்து வந்தான். தாத்தா, அவனது அன்புச் செயலைப் பாராட்டினார். பெற்றோர்களும் பாராட்டினார்கள். அவன் விரும்பியவாறு, தாத்தாவும் அவனது வீட்டிலேயே மகிழ்ச்சியுடன் வாழ்ந்து வந்தார். குமணனும் அளவற்ற மகிழ்ச்சி அடைந்தான். குமணனைப்போல அன்புடையவர்கள், தங்கள் உடலாலும் பொருளாலும் அனைவர்க்கும் உதவுவார்கள்.

அன்பிலார் எல்லாம் தமக்குரியர் அன்புடையார்
என்பும் உரியர் பிறர்க்கு.


– திருவள்ளுவர்

பொருள் : அன்பில்லாதவர்கள் எல்லாப் பொருள்களும் தமக்கே உரிமை என்பர். அவற்றைத் தாமே பயன்படுத்த விரும்புவர். அன்புடையவர்கள் தம்முடைய உடலையும் பிறர்க்குக் கொடுத்து உதவுவார்கள்.

அருஞ்சொற்பொருள் : என்பு – எலும்பு

## 2. அறிவுடைமை

தெனாலிராமனின் வீட்டைச்சுற்றியிருந்த தோட்டம் நீரின்றிக் காய்ந்திருந்தது. ஒருநாள் இரவு, திருடர்கள் தெனாலிராமனின் வீட்டில் திருடுவதற்காக வந்து மறைந்திருந்தார்கள். அதைத் தெனாலிராமன் கண்டதும் தன் மனைவியிடம் ‘திருடர்கள் நம் வீட்டிற்குத் திருட வருவார்கள். ஆதலால், வீட்டிலுள்ள பொன்பொருளையெல்லாம் பழைய பெட்டிகளில் வைத்து நம் தோட்டத்துக்கிணற்றில் போட்டு வைத்தால் பாதுகாப்பாய் இருக்கும்’ என்று திருடர்களின் காதில் விழும்படிக் கூறினார். பெட்டிகளில் கல்லையும் மண்ணையும் நிரப்பி, கிணற்றுக்குள் போட்டனர். இதைக் கண்ட திருடர்கள் மகிழ்ச்சி அடைந்தனர். தெனாலிராமன் வீட்டிற்குள் சென்றதும், திருடர்கள் அக்கிணற்றிலுள்ள பெட்டியை எடுக்க முயன்றனர்.



திருடர்கள், கிணற்றிலுள்ள ஏற்றத்தில் பொழுது விடியும்வரை தண்ணீரை இறைத்தனர்.திருடர்களுக்குத் தெரியாமல் தெனாலிராமன் தண்ணீரைத் தோட்டத்திற்குப் பாய்ச்சினார். தோட்டம் முழுவதும் நீர் பாய்ந்தது, 'நீங்கள் நீர் இறைத்தது போதும், மிக்க நன்றி!’ என்றார். இதைக் கேட்ட திருடர்கள் பயந்துபோய் ஓடிவிட்டனர். தெனாலிராமன், தனக்கு ஏற்படப் போகும் துன்பத்தைத் தனது அறிவுக்கூர்மையால் நீக்கினார் ; அறிவற்ற திருடர்கள் ஏமாந்தார்கள்.

அறிவுடையார் ஆவது அறிவார்; அறிவிலார்
அஃதறி கல்லா தவர்.

– திருவள்ளுவர்

**பொருள் :** அறிவுடையவர்கள் தமக்கு வரக்கூடியதை முன்னரே அறிந்து செயல்படுவார்கள். அறிவில்லாதவர்கள் அதனை அறிய மாட்டார்கள்.

**அருஞ்சொற்பொருள்:** ஆவது அறிவர் – பின் வருவதை முன் கூட்டியே அறிபவர்

## 3. மக்கட்பேறு

'அழகன்மலை' என்னும் சிற்றூரில் குமரன், தன் தாயுடன் வசித்து வந்தான். பிறந்தபோதே தந்தையை இழந்த குமரன் தன் தாயின் அரவணைப்பில் வளர்ந்தான். ‘விளையும் பயிர் முளையிலேயே தெரியும்’ என்பதற்கிணங்க, படிப்பில் சிறந்து விளங்கினான். அவனது திறமையை அறிந்த வகுப்பு ஆசிரியர், அவனைப் பெரிதும் ஊக்கப்படுத்தினார். பன்னிரண்டாம் வகுப்பில் மாவட்டத்திலேயே முதலிடத்தில் தேர்ச்சி பெற்றான்.



குமரனைப் பாராட்டும் விழாவிற்கு ஊராட்சிமன்றத் தலைவர் வருகை தந்து, குமரனைப் பாராட்டிப் பரிசளித்தார். அனைவரும் குமரனின் திறமையை வியந்து பாராட்டினர். அங்கு அமர்ந்திருந்த குமரனின் தாய், தான் குமரனைப் பெற்றபோது அடைந்த மகிழ்ச்சியைவிட மிகுந்த மகிழ்ச்சி அடைந்தாள். குமரனைப்போல நாமும் நம் தாயை மகிழ்ச்சியில் திளைக்க வைப்போம்.

ஈன்ற பொழுதின் பெரிதுவக்கும் தன்மகனைச்
சான்றோன் எனக்கேட்ட தாய்.

– திருவள்ளுவர்

பொருள் : மகனைப் பெற்றபோது தாய் மகிழ்ச்சி அடைகிறாள். அதைவிட அவனை அறிவில் சிறந்தவன் என்று பிறர் புகழக் கேட்டபோது மிகவும் மகிழ்ச்சி அடைகிறாள்.

அருஞ்சொற்பொருள் :

ஈன்ற பொழுதின் – குழந்தையைப் பெற்றெடுத்த பொழுது
உவக்கும் – மகிழ்ச்சி அடையும்
சான்றோன் – அறிவும் ஒழுக்கமும் நிறைந்தவன்.

## 4. இனியவை கூறல்

அருளும் அழகனும் ஒரே வகுப்பில் படித்து வந்தனர். அனைத்து மாணவர்களிடமும் அருள் அன்பாகப் பேசிப் பழகுவான். அதனால், அவனுக்கு வகுப்பில் பல நண்பர்கள் இருந்தனர். அழகனோ பிறரிடம் கடுமையாகப் பேசுவான். இனிமையாகப் பேசாததால் அழகனோடு யாரும் நட்புப் பாராட்டவில்லை.



வகுப்பு ஆசிரியர், அழகனைத் தனியாக அழைத்தார். 'அழகா! நீ நல்ல மாணவன். இருந்தாலும், நீ பிறரிடம் அன்பாகப் பேசுவதில்லை, வாய்ச்சண்டை போடாதே! அன்பாகவும் இனிமையாகவும் பேசு. வகுப்பிலுள்ளவர்கள் அனைவரும் உனக்கு நண்பர்களாவார்கள்' என்றார். ஆசிரியரின் அறிவுரையைக் கேட்டு அழகனும் பள்ளியிலுள்ள எல்லா மாணவர்களிடமும் அன்பாகப் பேசினான். கடுஞ்சொற்களைப் பயன்படுத்துவதே இல்லை. அழகனின் மனமாற்றம் அறிந்து வகுப்பு மாணவர்கள் அனைவரும் நண்பர்கள் ஆனார்கள். அவனை வகுப்புத் தலைவனாகவும் தேர்ந்தெடுத்தனர். அழகன் கடுஞ்சொற்களைத் தவிர்த்து இனிமையான சொற்களைப் பேசியதன் பயனை அறிந்துகொண்டான். நாமும் கடுஞ்சொற்கள் பேசுவதை விட்டு இனிய சொற்களையே பேசுவோம்.

இனிய உளவாக இன்னாத கூறல்
கனியிருப்பக் காய்கவர்ந் தற்று.

– திருவள்ளுவர்

**பொருள் :** இனிய சொற்கள் இருக்கும்போது இனிமையற்ற சொற்களைப் பேசுவது ஒரு மரத்தில் பழங்கள் இருக்கும்போது அவற்றை விட்டுவிட்டுக் காய்களைப் பறித்து உண்பதைப் போன்றதாகும்.

**அருஞ்சொற் பொருள் :**

| | | |
|---|---|---|
| இனிய | – | இனிமையான |
| உளவாக | – | இருக்கின்றபொழுது |
| இன்னாத | – | இனிமையல்லாத |
| கனி | – | பழம் |
| கவர்ந்து | – | விரும்பி எடுத்தல் |
| அற்று | – | போல |

## 5. இன்னா செய்யாமை

முத்து என்ற சிறுவன், நாய், பூனை, அணில், ஓணான் ஆகியவற்றைக் கண்டால், கல்லால் அடிப்பான். தும்பி, பட்டாம்பூச்சி ஆகியவற்றைப் பிடித்துத் துன்புறுத்துவான். பெற்றோர் அறிவுரை கூறியும் அவன் திருந்தவில்லை.



முத்து ஒருநாள் வீட்டின்முன் அமர்ந்து வாழைப்பழம் சாப்பிட்டான். சாப்பிட்டுவிட்டு வாழைப் பழத்தோலைத் தெருவில் வீசினான். சிலர் அந்தத் தோலால் வழுக்கி விழுந்தார்கள். அதைக்கண்டு அவன் சிரித்தான்.

அப்பொழுது, தெருவில் நடந்து வந்த முத்துவின் அப்பா பழத்தோல் சறுக்கி விழுந்தார். வலி தாங்காமல் துடிதுடித்தார். தன் தவற்றை முத்து உணர்ந்தான். பிறருக்குச் செய்த தீமை தனக்கும் வந்துவிட்டதே என வருந்தினான்.

'இனி பிறருக்குத் தீமை செய்யமாட்டேன்' என்று தன் தந்தையிடம் மன்னிப்புக் கேட்டான். முத்துவின் மனமாற்றம் பெற்றோருக்கு மகிழ்ச்சியைத் தந்தது.

பிறர்க்கின்னா முற்பகல் செய்யின் தமக்கின்னா
பிற்பகல் தாமே வரும்.

– திருவள்ளுவர்

பொருள் : நாம் பிறர்க்குச் செய்யும் தீங்கு பின்னர் நம்மையே வந்து சேர்கிறது. ஆகவே, பிறர்க்குத் தீங்கு செய்தல் கூடாது.

அருஞ்சொற்பொருள் :

இன்னா – தீமை

தாமே வரும் – தானே தேடி வரும்.

## பயிற்சிகள்

### அ) பொருள் கூறுங்கள், எழுதுங்கள்.

எடுத்துக்காட்டு : இன்னா = துன்பம்

என்பு = ______________

ஈன்ற = ______________

உவக்கும் = ______________

### ஆ) பிரித்து எழுதுங்கள்.

எடுத்துக்காட்டு : பிறர்க்கின்னா = பிறர்க்கு + இன்னா

தமக்குரியர் = ______ + ______

காய்கவர்ந்து = ______ + ______

பெரிதுவக்கும் = ______ + ______

### இ) எதிர்ச்சொல் எழுதுங்கள்.

எடுத்துக்காட்டு : பிறர்க்கு x தமக்கு

அன்பிலார் x ______________

அறிவுடையார் x ______________

இனிய x ______________

### ஈ) கீழ்க்காணும் திருக்குறளுக்கு பொருள் எழுதுங்கள்:

அன்பிலார் எல்லாம் தமக்குரியர் அன்புடையார்
என்பும் உரியர் பிறர்க்கு.

______________________________________________

______________________________________________

______________________________________________

பாடப்பகுதியில் இடம்பெற்றுள்ள பிற குறட்பாக்களுக்கும் கருத்துரை எழுதுங்கள்.

# நல்வழி

## 1. உதவி செய்வோரே உயர்ந்தவர்

சாதி இரண்டொழிய வேறு இல்லை சாற்றுங்கால்
நீதி வழுவா நெறிமுறையின் – மேதினியில்
இட்டார் பெரியோர் இடாதோர் இழிகுலத்தோர்
பட்டாங்கில் உள்ள படி.

– ஔவையார்

பொருள் : அற நூல்களின்படி, இந்த உலகத்தில் சாதிகள் இரண்டைத்தவிர வேறு இல்லை. அவ்விரண்டு சாதியினரும் யாவரெனில் நீதி தவறாது நல்ல நெறிகளைக் கடைப்பிடித்து முறையாக ஏழைகளுக்குக்கொடுத்து உதவி செய்பவரே உயர்ந்தவர் ஆவார். அவ்வாறு உதவி செய்யாதவர் தாழ்ந்தவர் ஆவார்.

அருஞ்சொற்பொருள் :

| | | |
|---|---|---|
| சாற்றுங்கால் | – | சொல்லும்போது |
| வழுவா | – | தவறாது |
| மேதினியில் | – | உலகில் |
| பட்டாங்கில் | – | அறநூலில் |
| உள்ளபடி | – | உள்ளவாறு |

## 2. வள்ளலுக்கு யாவரும் உறவினர்

மரம் பழுத்தால் வௌவாலை வாஎன்று கூவி
இரந்தழைப்பார் யாவரும் அங்கில்லை – சுரந்தமுதம்
கற்றா தரல்போல் கரவாது அளிப்பரேல்
உற்றார் உலகத் தவர்

– ஔவையார்

பொருள் : மரம் பழுத்துவிட்டால், 'இப்பழங்களை உண்ண வாருங்கள்' என்று வௌவாலைக் கூவி அழைப்பவர் எவருமில்லை. கன்றை உடைய பசு, பாலைச் சுரந்து கொடுப்பது போல, தன்னிடம் உள்ளதை மறைக்காமல் கொடுப்பவர்க்கு உலகத்தார் அனைவரும் சுற்றத்தினர் ஆவார்கள்.

அருஞ்சொற்பொருள் : கற்றா – கன்றை உடைய பசு, கரவாது – மறைக்காது.

## 3. வன்சொல்லும் இன்சொல்லும்

வெட்டனவை மெத்தனவை வெல்லாவாம் வேழத்தில்
பட்டுருவும் கோல்பஞ்சில் பாயாது – நெட்டிருப்புப்
பாரைக்கு நெக்குவிடாப் பாறை பசுமரத்தின்
வேருக்கு நெக்கு விடும்.
– ஔவையார்

**பொருள்:** யானை மீது பாயக்கூடிய அம்பு, பஞ்சுப்பொதியில் பாயாது. கடப்பாரையால் பிளக்கமுடியாத பாறை, பசுமையான மரத்தின் வேர்க்கு இடம் கொடுக்கும். அதுபோல், கடுமையான சொல் இனிமையான சொல்லை வெற்றி கொள்ள முடியாது.

**அருஞ்சொற்பொருள்:**

| | | |
|---|---|---|
| வெட்டனவை | – | வன்சொற்கள் |
| மெத்தனவை | – | இனிய சொற்கள் |
| வேழம் | – | யானை |
| பட்டுருவும் | – | அம்பு ஊடுருவிச் செல்லும் |
| கோல்பஞ்சு | – | மெல்லிய பஞ்சு |
| நெட்டிருப்புப் பாரை | – | இரும்புக் கடப்பாரை |
| நெக்கு விடும் | – | பிளந்துவிடும் |

### பயிற்சிகள்

**அ) சேர்த்து எழுதுங்கள்.**

எடுத்துக்காட்டு : இரந்து + அழைப்பார் = இரந்தழைப்பார்

1. இரண்டு + ஒழிய ____________________
2. கன்று + ஆ ____________________
3. நெட்டிருப்பு + பாரை ____________________

**ஆ) பின்வரும் சொற்களுக்கு எதிர்ச்சொல் எழுதுங்கள்.**

எடுத்துக்காட்டு : இட்டார் X இடாதார்

பெரியோர் X
இல்லை X
அங்கு X
வா X
வெட்டனவை X

# அகர முதலி

| | | |
|---|---|---|
| அடர்ந்த | – | நெருங்கிய |
| அண்டை | – | அருகில் |
| அமுது | – | சோறு |
| அரண்மனை | – | அரசனின் இல்லம் |
| அருகில் | – | பக்கத்தில் |
| ஆவல் | – | விருப்பம் |
| ஆற்றல் | – | திறன் |
| இல்லம் | – | வீடு |
| உணவகம் | – | உணவு விற்கும் இடம் |
| உரைத்தல் | – | கூறுதல் |
| உறுதி | – | நிச்சயம் |
| என்றைக்கும் | – | எல்லா நாள்களிலும் |
| ஏரி | – | பெரிய நீர் நிலை |
| ஒலிபெருக்கி | – | ஒலியினை பெருக்கும் கருவி |
| ஓய்ந்து | – | சோர்ந்து |
| கட்டவிழ்ந்து | – | விடுவித்து |
| கடைவீதி | – | கடைத்தெரு |
| களிப்போம் | – | மகிழ்வோம் |
| கனி | – | பழம் |
| கேளிர் | – | உறவினர் |
| கொடேல் | – | கொடுக்காதே |
| கோடை | – | வெயில் காலம் |
| சிற்றுண்டி | – | இட்டலி, தோசை போன்ற எளிய உணவு |
| சிற்றூர் | – | சிறிய ஊர் |
| செம்மொழி | – | செம்மையான மொழி |
| சேனை | – | படை |
| சொக்கவைக்கும் | – | மகிழ வைக்கும் |
| சோலை | – | பூங்கா |
| தடி | – | கம்பு |
| திடல் | – | விளையாடுமிடம் |
| திறை | – | வரி |
| தினம் | – | நாள் |

| | | |
|---|---|---|
| தூறல் | – | சிறு மழை |
| தென்னம்பிள்ளை | – | தென்னங்கன்று |
| தொண்டு | – | பணி செய்தல் |
| தொலைவு | – | தூரம் |
| தொன்மை | – | பழமை |
| தோண்டுதல் | – | குழி பறித்தல் |
| நனி | – | மிகுதி |
| நூலகம் | – | நூல்கள் நிறைந்திருக்கும் இடம் |
| நெஞ்சை அள்ளும் | – | உள்ளத்தை ஈர்க்கும் |
| நேயம் | – | அன்பு |
| நேர்மை | – | உண்மை |
| நோக | – | வலிக்க |
| பசுமை | – | பச்சை நிறம் |
| பன்மடங்கு | – | பல மடங்கு |
| பாகுபாடு | – | பிரிவினை |
| புவி | – | பூமி |
| பூங்கா | – | சோலை |
| பேரொலி | – | மிகுந்த ஒலி |
| பேறு | – | செல்வம் |
| போராட்டம் | – | எதிர்ப்புத்தெரிவித்தல் |
| மண்டி | – | செழிப்பாக |
| மரங்கொத்தி | – | மரங்கொத்தும் பறவை |
| மாற்றான் | – | பகைவன் |
| மிருகம் | – | விலங்கு |
| முதன்மையான | – | தலைமையான |
| மெத்தவும் | – | மிகவும் |
| வல்லவன் | – | ஆற்றல் மிக்கவன் |
| வளைவு | – | வளைந்த பகுதி |
| விடா முயற்சி | – | தொடர் முயற்சி |
| விடுதலை | – | விடுபடுதல் |
| விருப்பம் | – | ஆவல் |
| விழா | – | கொண்டாட்டம் |
| வெல்க | – | வெற்றி பெறுக |

## திறன் பகுதி / திறன்

| | | பாடம் |
|---|---|---|
| **1.** | **கேட்டல்** | |
| 1.1 | வருணனை விடுகதைப் பாடல்களைக் கேட்டறிதல் | 1 |
| 1.2 | சிந்தனையைத் தூண்டும் கதைகளைக் கேட்டறிதல் | 12,13,23 |
| 1.3 | புதிர்களைக் கேட்டுப் புரிந்து கொண்டு விடை கூறுதல் | 6 |
| 1.4 | வானொலி / தொலைக்காட்சி செய்திகளைக் கேட்டறிதல் | 17 |
| **2.** | **பேசுதல்** | |
| 2.1 | தங்குதடையின்றிப் பேசுதல் | 2 |
| 2.2 | உரிய ஒலிப்புடன் பேசுதல், பாடுதல் ( ல, ள, ழ, ண, ன, ர, ற ) | 7 |
| 2.3 | வருணனை கலந்து பேசுதல் | 10 |
| 2.4 | கலந்துரையாடல் | 13 |
| **3.** | **படித்தல்** | |
| 3.1 | அறிவிப்புகள், விளம்பரங்கள், சாலைக் குறியீடுகளைப் படித்தல் | 8 |
| 3.2 | கொடுக்கப்பட்டுள்ள தகவல்கள், கதைகளை உரிய ஒலிப்புடன் படித்தல் | 3,4,22 |
| 3.3 | சிறுவர் இதழ்களைப் படித்தல் | 15 |
| **4.** | **எழுதுதல்** | |
| 4.1 | படத்தைப் பார்த்துச் சிறுசிறு தொடர்கள் எழுதுதல் | 5 |
| 4.2 | இடைவெளி விட்டு எழுதுதல் | 11 |
| 4.3 | பத்தியைப் படித்து எளிய வினாக்களுக்கு விடையளித்தல் | 9 |
| 4.4 | புதிர்கள் / வருணனைத் தொடர்கள் எழுதுதல் | 16,19 |
| 4.5 | விவரித்து எழுதுதல் | 14,20 |
| **5.** | **படைப்பாற்றல்** | |
| 5.1 | படத்தை நிறைவு செய்தல் | 18 |
| 5.2 | உருவங்களின் வண்ணத்திற்கு ஏற்பத் தானியங்கள் ஒட்டுதல் | 6 |
| 5.3 | கொடுக்கப்பட்டுள்ள சொற்களைப் பயன்படுத்திக் கதை உருவாக்குதல் | 18 |
| 5.4 | செயல் திட்டம் | 15 |
| **6.** | **நடைமுறை இலக்கணம்** | |
| 6.1 | பெயருக்கேற்ற வினை முடிவு அறிதல் | 18 |
| **7.** | **தானே கற்றல்** | |
| 7.1 | அகர முதலியைப் பயன்படுத்துதல் | 24 |
| 7.2 | முதல் இரண்டு எழுத்துகளின் அடிப்படையில் அகர வரிசைப்படுத்துதல் | 24 |
| **8.** | **சொல்லாட்சித்திறன்** | |
| 8.1 | சொற்களஞ்சியம் பெருக்குதல் | 25 |
| 8.2 | மரபுச் சொற்கள் அறிதல் | 21 |